...நகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை (02.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 280

# வன்னி மக்களை வவுனியாவுக்கு வரவழைக்க அரசு நடவடிக்கை

## விவரம் இன்னும் ஒரு சில நாள்களில் அறிவிக்கப்படும்

கொழும்பு,செப்ரெம்பர் 02



**கிளிநொச்சி நோக்கிய படை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்களை பாதுகாப்பாக் வவுனியாவுக்கு வரவழைக்கும் நடவடிக்கைகள் இன்னும் ஒருசில தினங்களில் முன்னெடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.**

**அந்த மக்கள் எந்தப் பாதையால் வரவேண்டும்; எப்படி வரவேண்டும் என்ற விவரங்கள் மிக விரைவில் அம்மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அரசு கூறியுள்ளது.**

வன்னி மக்களை வவுனியாவுக்கு வரவழைப்பது தொடர்பான விவரங்களை முன்கூட்டி வெளியிட்டால் புலிகள் அரசின் இந்த ஏற்பாடுகளை குழப்பி, மக்களை ஆபத்தில் சிக்கவைத்து விடுவார்கள் என்பதால் அந்த விவரங்களை மிக இரகசியமாக வைத்திருப்பதாகவும் உரிய நேரத்தில் மாத்திரமே அவை வெளியிடப் படும் என்றும் அரசு மேலும் தெரிவித்தது.

கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே மேற்படி தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு:-

வடக்கை முற்றாகக் கைப்பற்றும் படை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் நேற்றும் தாக்குதல்

கிளிநொச்சி, செப். 02

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி நாச்சிக்குடாவின் இரு வேறு பகுதிகளில் விமானப் படையினரின் ஜெற் மற்றும் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர்கள் நேற்றும் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

நாச்சிக்குடாவில் வடக்கே உள்ள விடுதலைப் புலிகள் தளங்களை இலக்கு வைத்து நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. அத்தாக்குதலுக்கு 15 நிமிடங்களின் பின்னர் நாச்சிக்குடாவிற்கு கிழக்கே உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது விமானப் படையினரின் எம்.ஐ.24 ரக

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் தமிழர்களை பாதுகாக்க சகல கட்சிக் குழுவை நியமிக்க வேண்டும்

### ஜனாதிபதியிடம் விமல் வீரவன்ச கோரிக்கை

கொழும்பு, செப்.2

வடக்கிலிருந்து அரசாங்க நிர்வாக பிரதேசங்களுக்குள் வரும் தமிழர்களை பாதுகாப்பதற்காக நாடாளுமன்றத்தை பிரதிநிதி துவப்படுத்தும் சகல கட்சிகளின் உறுப்பினர்களையும் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குள் பிரவேசித்துள்ள பாதுகாப்பு படையினர் புலிகளின் இறுதிப் பலத்தின் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்ற நிலையில் , அப்பிரதேசங்களிலுள்ள பொதுமக்கள் படிப்படியாக சிவில் நிர்வாக பகுதிகளுக்கு வந்து கொண்டிருக்கின்றனர். பிரிவினைவாத பயங்கரவாதத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே அப்பகுதி யிலுள்ள மக்கள் சிவில்



(12ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழிகளை அமைத்துப் பாதுகாப்புத் தேடுமாறு மக்களுக்கு விடுதலைப் புலிகள் அறிவுறுத்து

வவுனியா, செப்.02

அரசாங்கப் படைகளின் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு மக்களைப் பதுங்கு குழிகளை அமைக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

**பதுங்கு குழிகளை அமைக்குமாறு புலிகள் வலியுறுத்தல்**

ஷெல் வீச்சுக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பதுங்கு குழிகளை அமைத்து அவற்றில் தங்கியிருக்கும்படி வன்னிப்பகுதி வாழ் மக்களை விடுதலைப் புலிகளின் அமைப்பின் அரசியல் பிரிவின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் கேட்கப்பட்டடுள்ளது.

அனைத்து இடங்களிலும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற அந்த அறிக்கையில், ஷெல் வீச்சுகள் மற்றும் வான் தாக்குதல் நிகழும் சந்தர்ப்பங்களில் உடனடியாகவே மக்கள் பதுங்கு குழிகளில் பாதுகாப்புத் தேட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-1)

## வன்னியில் பருவகால மழை ஆரம்பம், இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலத்தில்!

வவுனியா, செப். 02

வன்னியில் பருவகால மழை - மாரி காலத்து - மழை பெய்யத் தொடங்கி விட்டது. அதனால் இடம் பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கும் அவலம் தோன்றியுள்ளது.

குறிப்பாக வீதியோரங்களில் கொட்டில்களிலிலும் மர நிழல்களிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ள அகதிகள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டை குண்டுவெடிப்பு: இருபது பேர் கைது!

கொழும்பு, செப்.2

கொழும்பு, புறக்கோட்டையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 20 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

இச்சம்பவம் தொடர்பாக நான்கு பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் மூலம் இச்சம்பவத்துடன் தொடர்புடைய

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக் கப்பலில் தீ!

கொழும்பு,செப்.2

கடற்படையின் சஹாரா போர்க்கப்பலில் ஞாயிற்றுக்கிழமை இரவு தீவிபத்து ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தக் கப்பல் தரித்து நின்றபோதே கப்பலின் மின் பிறப்பாக்கி அறையில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது எனவும் சிறிய மின் ஒழுக்கு ஒன்றின் மூலமே இந்தத் தீ விபத்து ஏற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவியின் வாசலில் படையினர்?

கொழும்பு, செப்.2

வன்னியில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இராணுவத்தினர் மல்லாவியைக் கைப்பற்றும் நிலையில் - அதன் வாசலில் - உள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் 57ஆவது படைப்பிரிவினர், காலாட்படை கனரக மற்றும் ஆட்லறி படைப்பிரிவுகளின் உதவியுடன் ஞாயிறன்று மல்லாவியை சுற்றியமைக்கப் பட்டிருந்த விடுதலைப் புலிகளின் முன்

(12ஆம் பக்கம் பாரகக)

## முக்கூட்டணித் தலைவர்களையும் பேச்சுக்கு அழைக்கிறது இந்தியா

புதுடில்லி, செப்.2

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் ரி.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி)தலைவர் ஸ்ரீதரன்(சுகு) ஆகிய முக்கூட்டணித் தலைவர்களையும் இந்திய அரசு புதுடில்லிக்கு அழைத்துப் பேசவிருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சின் அழைப்பை ஏற்றுச்செல்லும் அவர்கள் பிரதமர் மன்மோகன் சிங் உட்படப் பலரைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு, செப். 02

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்துவது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கிளப்பியிருக்கும் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளரையும் கல்வி அமைச்சின் செயலாளரையும் உயர்நீதிமன்றம் நேற்றுப் பணித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, நிமால் காமினி அமரதுங்க ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை நேற்று விடுத்தது.

தங்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணியை ஆசிரிய தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

இதனால் விடைத்தாள் திருத்தும் பணி

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



பொறியியலாளரும், யாழ்ப்பாணப.நோ.கூ. சங்கத்தின்தலைவரும், எமதுவழிகாட்டியுமான திரு ப.கிரிதரன் அவர்களின்பாசமிகு தந்தை

### நடராஜா பத்மநாதன்

(சட்டத்தரணி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பஸ்ரியன் வெதுப்பகம்,
பஸ்ரியன் சந்தி, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

### கோபிநாத் யுகவர்ணன்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி செல்வராணி கோபிநாத் அவர்களின் அன்பு மகன்

**செல்வன் கோபிநாத் யுகவர்ணன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

அதிபர்,
ஆசிரியர்கள்,

## கைத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சு
## லங்கா சிமெந்து லிமிட்டெட்

**பாவிக்கப்பட்ட பார ஊர்தி உபகரணங்கள்/வாகனங்கள்**

### விற்பனைக்கான கூறுவிலை கோரல்

மேற்கூறப்பட்ட கூறுவிலை கோரலுக்கான ( வுத் திகதி எதிர்வரும் 30 செப்ரெம்பர் 2008 மா ல 3 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. பொருள்களை பார்வையிடுவது 22ஆம் திகதி செப்ரெம்பர் 2008 வரை. கூறுவிலை கோரலுக்கான ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது 29ஆம் திகதி செப்ரெம்பர் 2008 வரைக்கும்

தலைவர் - கூறுவிலை கோரல் சபை,

**லங்கா சிமெந்து லிமிட்டெட்,**

7ஆவது மாடி S.E.C. கட்டடம்,
130, W.A.D. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு - 02
தொ.பே.இல.: 0112 447746 (சி/554336)



## Ceylinco Insurance Company Limited

## பதவி வெற்றிடம்

வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலைக்கு முன்னேற நாம் அனைவரும் விரும்புகின்றோம். நல்லதொரு தொழில், உயர்ந்த வருமானம், புதிய வாகனம், வசதியான வீடு, வெளிநாட்டுச் சுற்றுலா, சர்வதேசப் பயிற்சி, மூலதனம் இன்றி எல்லையற்ற வருமானம் இவற்றை அடைந்து வாழ்வில் வெற்றியீட்ட எம்முடன் இணையுங்கள்.

இலங்கையில் ஆயுள் காப்புறுதித் துறையில் 180ற்கும் மேற்பட்ட கிளைகளைத் தன்னகத்தே கொண்டு இலங்கையில் அசைக்க முடியாத காப்புறுதித் தலைவனாக திகழும் செலிங்கோ லைவ் PLC தனது சுன்னாகம் கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்களை இணைத்துக் கொள்கின்றது.

**1. விற்பனை ஆலோசகர்**

தகைமை : க.பொ.த(சா/த) 3 விசேட சித்தி அடங்கலாக கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

**2. அணித் தலைவர்:**

தகைமை: பதவி 1 இல் குறித்த தகைமையுடன் IBSL சித்தி. காப்புறுதித்துறையில் முன் அனுபவம்.

**3. விற்பனை மேற்பார்வை அதிகாரி:**

பதவி இரண்டில் குறித்த தகைமையுடன் காப்புறுதித் துறையில் குறைந்தது 3 வருட முன் அனுபவம்

**நேர்முகத் தேர்வு:**

**08.09.2008 திங்கள் காலை 10.00 – 2.00 மணி**

**இடம்: 145, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 021 2228074**

## லங்கா சித்த ஆயுள்வேத முடிவுகள் வெளியாகின

யழ்ப்பாணம், செப்.2

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட இறுதிவருட பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

அனெற் நித்தியானந்தன், நடராஜா சிவராதிரன், நிவாஜினி கணேசலிங்கம், ஷர்மிலா தம்பியையா, துஷ்யந்தி அரசரத்தினம்.

இப்பரீட்சைக்கு தோற்றிய ஏனைய மாணவர்கள் தமது பெறுபேறுகள் பற்றிய விவரங்களை இக் கல்லூரியின் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். (1)

## 'வாழ்வுதனைத் தேடி...' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.2

மு.ஆ.சுமன் எழுதிய 'வாழ்வுதனைத் தேடி...' என்னும் கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சிதம்பராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவகுரு வித்தியாசாலை அதிபர் எஸ்.சிவநாதன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். முதற்பிரதியை, சிதம்பராக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.விஜயநாதன், இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம் ஆகியோர் பெறுவர். நூலின் அறிமுக உரையை கலைஞர் இ.சி.சுந்தரலிங்கமும் மதிப்பீட்டுரைகளை கரவெட்டி கலாசாரப் பேரவையைச் சேர்ந்த செ.செல்வசுகுணா, எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் ஆகியோரும் நிகழ்த்துவர். (202)

## உழவு இயந்திர சில்லுக்குள் சிக்கி சிறுமி காயம்

யாழ்ப்பாணம், செப். 02

உழவு இயந்திர முன் சில்லுக்குள் அகப்பட்டு இரண்டு வயதுக் குழந்தை படுகாயமடைந்தது.

இச் சம்பவம் நேற்று காலை நுணாவில் மத்தியில் இடம்பெற்றது.

குழந்தையின் தந்தையார் உழவு இயந்திரத்தை பின்புறமாக (றிவேஸ்) இயக்கிய போது முன் சில்லுக்குள் குழந்தை அகப்பட்டு தலைப்பகுதியில் காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவயோகநாதன் விதுஷா (வயது 2) எனும் குழந்தையே காயமடைந்ததாகும்.

தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (1-207)

## கிராம அறிமுக விழாவும் விளையாட்டுப்போட்டியும்

கோப்பாய், செப்.2

ஊரெழு கிழக்கு ஆனந்தகானம் சர்வசக்தி இலங்கை வங்கிக் கிராம அறிமுக எழுச்சி விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 2.30 மணிக்கு ஊரெழு சர்வசக்தி சனசமூக நிலைய விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன.

சனசமூக நிலையத்தலைவர் அ.சாந்தரூபன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் கலந்து கொள்வார். (1-72)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் தாதியக் கல்லூரியில் காவலாளராகக் கடமை புரியும்
சின்னத்துரை ஜெகதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி முத்தம்மா சின்னத்துரை

அவர்கள் 26.08.2008 அன்று காலமானதையிட்டு அவர்களது மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தாதியக் கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வானை அப்பையா



வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கை வாழ்விடமாகவும், பிரான்ஸ் - இவ்விறி - பொண்டியை தற் காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை அப்பையா 26.08.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வைத்தி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆறுமுகம் - வைரவப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மகேஸ்வரி (பிரான்ஸ்), இராஜதுரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கதிர்காமு சின்னாச்சி (தாயகம்), அம்பலம் (தாயகம்), தங்கம் (தாயகம்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராஜா (பிரான்ஸ்), ரதிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சுதராஜ் (பிரான்ஸ்), திரஜோந் (பிரான்ஸ்), சுதாஜினி (பிரான்ஸ்), துவாரகா (பிரான்ஸ்), செந்தூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2008) புதன் கிழமை காலை 8 மணி முதல் 9 மணிவரை **Chambre mortuaire Hopital Jean verdier - Avenue du 14 Juillet - 93140 Bondy (Bus: 147, 616A** தரிப்பிடம் **Hopital jean verdier)** என்ற முகவரியில் நடைபெற்ற பின்னர் அன்னாரின் பூதவுடல் காலை 10 மணி முதல் 11 மணிவரை **Cimetiere pere - Lachaise (Metro : Gambetta)** வில் உள்ள மயானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இராஜதுரை [துரை]
01 48 48 42 69,
06 12 68 56 06
நடராஜா [நடா - Ivry]
01 46 72 41 60,
06 12 68 57 59

தகவல்:
குடும்பத்தினர்.
சகோதரர்கள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
யாழ்.தொடர்பு: அ.கனகசபை
துர்க்கை அம்மன் கோயிலடி.
சிறுப்பிட்டி வடக்கு. T.P.: 077 9004562

### வேலாயுதர் இளையதம்பி சண்முகம்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த வரும் மார்க்கம் ஒன்ராரியோவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய வேலாயுதர் இளையதம்பி சண் முகம் 24.08.2008 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இளையதம்பி - மீனாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், முத்தையா - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான திருமதி கனகம்மா நல்லையா, பரமநாதன், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடனசபாபதி, நடேஸ்வரன், நடனசுந்தரம், நடேசன், நடேஸ்வரி, யோகீஸ்வரி, யோகீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரி, கிருஸ்ணவேணி, கேதீஸ்வரி, ஜெயந்தினி, சச்சிதானந்தன், சிவபாலன், சிவதர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரிந்தன், ஜேன், மகிந்தன், சிவோன், நிரன், நரேன், மேராக், பிறிந்தி, பிரியா, சிந்தியா, கிருஷ்ணா, வாணி, யாதவன், சுஜனி, ஹர்சினி, யஷ்வினி, அனா, உமா, சங்கரி ஆகியோரின் பேரனும், Arun, Shay, Faye, Fin ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.08.2008 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
நடா: 416 527 0296, 905 479 6306, கேதா: 416 568 1912

### திருமதி நவரத்தினம் பாக்கியம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் நவரத்தினம் 29.08.2008 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் (மாவிட்டபுரம்) மனைவியும், மனோகரன் (ஓய்வுபெற்ற இ.போ.சபை உத்தியோகத்தர்), கருணாகரன் (ஓய்வுபெற்ற இ.போ.சபை உத்தியோகத்தர்), உமாபதிசிவம் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயும், யோகரத்தினம், யோகேஸ்வரி, ஜெயராணி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்கு 90 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம்

## எதிர்வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படும்

மந்திகை, செப்.2

பருத்தித்துறைத் துறைமுகப் பகுதியில் இருந்து யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து தும்பளை மதவடியில் இயங்கிவரும் பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்கு 90 லட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை சிவன் தோயிலுக்கு அண்மையில் மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மருந்தகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி பருத்தித்துறை நகரசபை முன்னாள் உப தலைவர் பி.வின்சென்ற் டீ போல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், யாழ்.கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எம்.குகநேசன், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ஏ.ஏ.நடராஜா, டாக்டர் திருமதி.எம்.மகேந்திரா ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (203-218)

# பண்ணை மார்புச் சிகிச்சை நிலைய வைத்தியசாலையில் மத்திய குளிரூட்டி நிலையம், எக்ஸ்ரே பிரிவு ஆகியன திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 2

பண்ணையில் உள்ள மார்புச் சிகிச்சை நிலைய வைத்தியசாலையில் மத்திய குளிரூட்டி நிலையம், எக்ஸ்ரே கதிரியக்கப் பிரிவு ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வைத்து யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களம் குடும்பநல மருத்துவ மாதர்களின் போக்குவரத்து வசதிக்கென மோட்டார் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை, யுனிசெவ் மாவட்ட பிரதிநிதி டாக்டர் டயான், ஐ.ஓ.எம். நிறுவன மாவட்ட பிரதிநிதி செல்வி எஸ். சாமிநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (203-224-54)

## தென்மராட்சி வலய மாணவருக்கு சைவசமயப் அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான சைவ சமயப் பாட அறிவுப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## கதலி வாழைப்பழம் விலை உயர்வு

யாழ்ப்பாணம்,செப்.2

கதலி வாழைப்பழத்தின் விலை 70 ரூபா தொடக்கம் 80 ரூபாவரை அதிகரித்துள்ளது.

அண்மைக்காலமாக கிலோ 20 ரூபா தொடக்கம் 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த வாழைப்பழத்தின் விலை பின்னர் 50 ரூபாவாக உயர்வடைந்திருந்தது.

தற்போது 70 தொடக்கம் 80 ரூபாவிற்கு உயர்வடைந்துள்ளது.

ஆலயங்களில் இடம்பெற்றும்வரும் திருவிழாக்களை அடுத்தே வாழைப்பழத்தின் விலை உயர்வடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (203-224)



கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் 'பற்றிக் பிறிண்டிங்' கண்காட்சி இடம்பெற்றது.
கண்காட்சியை மக்கள் பார்வையிடுவதையும் 'பற்றிக் பிறிண்டிங்' தொழிற்பயிற்சியை நிறைவு செய்த மாணவி ஒருவருக்கு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)




# காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருப்பணி வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.2

சுமார் முந்நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயமான காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருப்பணி வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

ஆலய சுற்றுப் பிராகாரத்தில் முருகைக் கற்களாலும், சுண்ணாம்பினாலும் அமைந்த தூண்கள் நூற்றாண்டுகளுக்கு மேல் கடந்து சேதடைந்துள்ளன.

அத்தோடு உள்வீதி சுற்று மதில்களும் இதே நிலைமையில் காணப்படுகின்றன. மேற்கூரைகள் பழுதடைந்து மழைகாலங்களில் மழைநீர் ஆலயத்தினுள் செல்லும் நிலைமை காணப்பட்டது.

இவற்றைக் கருத்திற் கொண்டு ஆலயத்தைப் புதுப் பொலிவுடன் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் ஐயனார் மொட்டைக் கோபுரம், அம்பாள் தெற்குவாயில் மண்டபம், அம்பாளுக்கான மொட்டைக் கோபுரம், ஆகியனவும் அமைக்கப்பட்டு வருவதுடன் சுற்றுப் பிராகார மண்டப வேலைகளும் இடம் பெற்றுவருகின்றன. (203-250)

## சாவகச்சேரி பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

குருநகர்,செப்.2

சாவகச்சேரிப் பகுதியின் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் ஒருலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

கச்சாய் மகளிர் புனர்வாழ்வு நிலையத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும் கச்சாய் தெற்கில் அமைந்துள்ள வினோபா சிறுவர் பராமரிப்பு நிலையக் கட்டடப் புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (203-51)

## செறிவு கூடிய கரைசலை பருகியதாலேயே மயக்கம்

யாழ்ப்பாணம்,செப். 2

தண்ணீர் விட்டுக் கலக்கப்படாத நிலையில் இருந்த செறிவு கூடிய கரைசலைப் பருகியதாலேயே இரு சிறுவர்களுக்கு வாந்தியும் மயக்கமும் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தாகசாந்தி நிலையத்தில் இது தொடர்பாகப் பரீட்சித்தபோதே இது கண்டுபிடிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் திருவிழாக் கால தண்ணீர் பந்தலில் கொடுக்கப்பட்ட தண்ணீரை குடித்த இரு சிறுவர்கள் வாந்தியும் மயக்கமும் ஏற்பட்ட நிலையில் கடந்த 26 ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (203)

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# நெற்செய்கைக்கு உரமானியம் பெறுவதற்கென விண்ணப்பித்தவர்களுள் சிலர் மேட்டு நிலச் செய்கையாளர்

யாழ்ப்பாணம், செப்.2

காலபோக நெற் செய்கைக்கு உரமானியம் பெறுவதற்குத் தென்மராட்சியில் பெருமளவானோர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுள் மேட்டுநிலச் செய்கையாளர் சிலரும் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேச கமநலசேவை நிலையங்களுக்கு விவசாய சம்மேளனங்கள் ஊடாக விண்ணப்பித்தவர்களில் சிலர் மேட்டு நிலச் செய்கையாளர் எனத் தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விதை நெல் மற்றும் உரமானியம் விநியோகிப்பது தொடர்பாக நெற் செய்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்தபோது நெற் செய்கை மேற்கொள்ளாமல் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் மட்டும் ஈடுபடுவோரும் உரமானியத்திற்கு விண்ணப்பித்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். (202-207)

## நூலகங்களின் ஊழியருக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களில் கடமையாற்றும் நூலகர் மற்றும் நூலக சேவகர் ஆகியோருக்கு ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தினரால் ஐந்து நாள்கள் பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாநகரசபை பொது நூலக மண்டபத்தில் நாளை புதன்கிழமை தொடக்கம் ஏழாந்திகதி வரை பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. (203-207)

# முதுகலைமாணி அபிவிருத்திக் கற்கை நெறியின் முதலாம் அணியில் 42 மாணவர்கள் சித்தி

மானிப்பாய், செப்.2

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீட முதுகலைமாணி அபிவிருத்தி கற்கை நெறியின் முதலாம் அணியில் 42 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை முதுகலைமாணி அபிவிருத்தி கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் வெளியிட் டுள்ளார்.

அதிவிசேட சித்தி

இ.பிரபாகரன்; திருமதிஏ.கணேசலிங்கம், எஸ்.ஜனார்த்தனன், விஜீவாகரன், ஜெ . ஜூட் வோல்ரன், திருமதி பி.கணபதிப்பிள்ளை, இ.கிருஸ்ணராசா, செல்வி வி.பரராஜசிங்கம், கே.பிரபாகரன், கே.இராஜதுரை, கே.இராமஜெயம், கே.சசிகேற்றன், ஏ.சரவணபவன், ஆர்.தவகுமாரன், ரி.தேவானந், திருமதி ம. வசந்தகுமார்

திறமைச்சித்தி

ஜி.அன்ரன் பிறேமதாஸ், கே.தர்மசீலன், எஸ்.கோடீஸ்வரன், செல்வி எஸ். குமாரசுவாமி, எம்.மரியதாஸ், எம்.நிறைஞ்சன், வி.பரமேஷ்வரன், ஆர்.பசுபதீஸ்வரன், ஏ.ரகுநாதன், எஸ்.ராஜேஸ்வரன், செ.ரமேஷ், கே.ரமேஷ்நேசன், ரி.சந்திரகாசன், ஆர்.சர்வேந்திரன், எம்.சிவகுமார், எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி எஸ்.சிறிதரன், செல்வி ரி.சுப்பிரமணியம், செல்வி எஸ். சுந்தரம், வை.சுரேஷ், ஏ.சுரேஷ், திருமதி.சி.தர்மரட்ணம், ரி.தவபாக்கியராஜா, திருமதி எஸ்.தயாளன்.

சித்தி

ஆர்.திரவியநாதன். (203- 95)

## அறவழி செயலக கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், செ.2

கைதடி-நுணாவில் அறவழிப் போராட்டக் குழுவின் அறவழி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அறவழி செயலகக்கட்டட, கற்றல்வளப் பயன்பாட்டு நிலையத்திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைப்பார்.

இந்நிகழ்வில் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் பிரதிநிதி வே.ஜெயராஜசிங்கம், தெனமராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசன், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், எஸ்.சி.ஐ.எஸ்.எல். நிறுவன யாழ். பதில் திட்ட முகாமையாளர் சு.க.மகேந்திரம் ஆகியோர் கௌரவ அதிகாரிகளாகக் கலந்து கொள்வர். (203-236-207)

# குடாநாட்டில் பெய்துவரும் மழையை அடுத்து பெரும்போகச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், செப். 2

குடாநாட்டில் தற்போது திடீர் திடீரெனப் பெய்துவரும் மழையை அடுத்து விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதில் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

விவசாயிகள் நெல்வயல்களை உழுது, பண்படுத்திப் பசளைகளையும் போட்டு வருகின்றனர்.

பருவகால மழை [illegible] டியே பெய் [illegible] நெற்செய்கைக்கான ஆரம்பகட்ட வேலைகளை அவர்கள் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை - இந்தமுறை விதை நெல்லுக்கான விலையும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனைக்கருத்திற் கொண்டு விவசாய சம்மேளனங்கள் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் விதை நெல்லை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அறியப்படுகிறது. (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ராஜதந்திரிகளின் பருந்துப் பாய்ச்சலும் இலங்கை ராஜதந்திரக் குஞ்சுகளின் பதுங்கல் பீடிகையும்

இக்கட்டுரையானது முற்றிலும் ஒரு அறிவியற் கண்ணோட்டத்திலேயே முன்வைக்கப்படுகின்றது.

விருப்பு வெறுப்புக்கு அப்பால் அரசியல் விஞ்ஞானத்தை அப்படியே யதார்த்தத்தில் கணித ரீதியாக கணக்குப் போட்டுப்பார்க்கும் ஓர் ஆய்வாகவே இது அமைகின்றது.

தேசிய இனப்பிரச்சினை என்பது எப்போதும் முதலாவது அர்த்தத்தில் ஒரு சர்வதேசப் பிரச்சனை ஆகும்.

சர்வதேசம் என்பதற்குரிய ஆங்கிலப்பதம் International என்பதாகும்.

இதன்படி International என்றால் தேசங்களுக்கிடையானதெனப் பொருள்படும்.

மேலும் International Relations என்றால் தேசங்களுக்கிடையான உறவுகள் என்பதாகும்.

ஆகவே இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளுக்களுக்கிடையேயான உறவு தேசங்களுக்கிடையிலான உறவுகள் ஆகும்.

இவ்வாறு தேசங்களுக்கிடையிலான உறவு என்பது தமிழில் பிழையான மொழி பெயர்ப்பாக "சர்வதேச உறவுகள்" எனப் பிரயோகிக்கப்படுகின்றது.

"சர்வ" என்ற வடமொழிப் பதத்திற்கு அர்த்தம் "அனைத்து" என்பதாகும்.

உண்மையில் பல் தேசங்களுக்கிடையேயான உறவு என்ற பதம் தான் "சர்வதேச உறவு"

நாம் "சர்வதேச உறவு" எனப் பிழையாக பிரயோகித்து பிழையான பொருள் கொண்டு விட்டோம்.

தற்போது சரியாகவே பன்நாட்டு உறவுகள் என்ற பதம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பன்நாட்டு உறவு என்ற அர்த்தத்திலான சர்வதேச உறவுகளையும் தாண்டி இன்று உலகம் பூகோளமயத்திற்குள் பிரவேசித்து விட்டது.

### முப்பரிமாணம் கொண்டது இனப்பிரச்சினை

ஆதலால் இன்றைய நிலையில் ஒரு தேசிய இனப்பிரச்சினை என்பது ஒரே வேளையில் சர்வதேச பிரச்சனையாகவும், பூகோளப் பிரச்சினையாகவும் முப்பரிமாணம் கொண்டதாய் உள்ளது.

இந்த வகையில் தேசிய இனப்பிரச்சினையை சர்வதேச பிரச்சினையில் இருந்து பிரித்துப்பார்க்க முடியாது என்பதுடன் ஒரு தேசிய இனப்பிரச்சினையானது சர்வதேச அரசியலாலும் பூகோள அரசியலாலும் சுற்றிவளைக்கப்படும் ஒன்றாயும் உள்ளது.

## நாராயணன் குழுவின் வருகையும் அவர்களின் உள்நோக்கமும்

எனவே, ஒடுக்கும் இனமா அல்லது ஒடுக்கப்படும் இனமா மேற்படி சர்வதேச அரசியலாலும் பூகோள அரசியலாலும் சுற்றி வளைக்கப்படுகிறது என்பதிலிருந்தே ஒரு தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வின் தன்மை தங்கியுள்ளது.

ஆதலால் இன்றைய இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையை அரசியல் மதிப்பீடு செய்யும்போது உள்நாட்டு - வெளிநாட்டு - பூகோள அரசியல் என்ற முப்பரிமானத்தில் நின்று நோக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில் ஆர்.கே. நாராயணன் தலைமையிலான இந்திய தூதுக்குழுவின் கொழும்பிற்கான 20.06.2008 திடீர் வருகையானது இனப்பிரச்சினை விவகாரத்தில் எத்தகைய முக்கியத்துவத்தை கொண்டுள்ளது என்பதை நுணுகி ஆராய்ந்து பொருள் கொள்ள வேண்டியது இராஜதந்திர அரசியலில் ஒரு தலையாய பக்கமாகும்.

### நாராயணனின் விஜயம் அரசியல் பிரகடனமாகும்

மேற்படி இராஜதந்திரக்குழுவின் கொழும்பு விஜயம் ஓர் இராஜதந்திர பயிற்சியல்ல. இது ஒரு வகையில் ஓர் அரசியல் பிரகடனமாகவும், ஓர் அரசியல் - இராணுவ உள்ளோட்டமாகவும் காணப்படுகின்றது.

அதாவது, மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் செயற்பட்டு வருகின்றார்.

அது இந்தியாவின் அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் முரண்படுகிறது.

மேற்படி இரு நிகழ்ச்சி நிரல்களுக்கும் இடையில் ஓர் அமைவு ஒழுங்கை காண்பது தான் மேற்படி நாராயணன் குழு வினரது விஜ யத்தின் நோக் கமாகும்.



முதலில் மகிந்தவின் அரசியல் பலம் என்ன என பதை எடை போடுவோம்.

1. உள்நாட்டில் இனவாத அடிப்படை யிலாயினும் மக்களின் பேராதரவினை பெற்ற

## இனப்பிரச்சினையில் சமஷ்டி அடைப்படைத் தீர்வே தனக்குச் சாதகம் எனக் கருதும் மேற்கு உலகம்

ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினதும் அரசாங்கத்தினதும் தலைவர். அவர் மேற்கொள்ளும் யுத்தத்தை இங்குள்ள மக்களில் 88 வீதத்தினர் ஆதரிக்கின்றனர். மொத்த மக்கள் தொகையின் வீத கணிப்பின்படி 30 வீதமான மக்களின் ஆதரவு மகிந்தவின் தற்போதைய யுத்தத்திற்கு கிடைக்கின்றது என்பது வெளிநாட்டு அரசுகளுக்கு அதிர்ச்சியூட்டும் விடயமாகும்.

2. இந்தியா - இலங்கை உறவு தொடர்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தேடி வைத்த முதுசம்தான் மகிந்தவின் வெளியுறவுக் கொள்கைக்கான முதலீடாகும். அதாவது, நட்பு நிலையில் காணப்பட்ட இந்தியப் பழந்தமிழர் உறவை பகைநிலைக்குத் தள்ளிய ஜே.ஆர். இலங்கை அரசுக்கும் இனவாதத்திற்கும் தேடிவைத்த முதுசொத்தாகும். இது மகிந்த அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கைக்கான முதற்தரப் பலமாய் அமைந்தது.

3. புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று கூறி இந்தியா அரசை இராணுவ ரீதியில் தனக்கு சேவை செய்யச் செய்யும் A1 நேர்கோட்டு உறவை மகிந்த வடிவமைத்தார்.

புலிகளை ஒடுக்குவதற்கு சீனாவிடம் உதவி பெறுவதற்கான இலங்கை - சீனா A2 உறவைக்காட்டி இந்தியாவிடம் பேரம் பேசும் நிலையை மகிந்த வளர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

இத்தகைய பேரம் பேசுவதற்கான உறவுக் கோட்பாட்டுக்கு A2 எனப் பெயர்.

அதாவது, புலி களைச் சுற்றி வளைக்க இலங்கை - இந்திய உறவு என்ற A1 கோட்டையும் இலங்கை - சீனா- இந்தியா என்ற சுற்று வட்டத்தில் உருவா கும் A2 கோட்டையும் மகிந்த அரசாங்கம் தனது சுற்றிவளைப்புக்கான வெளியுறவுக் கொள்கை மூலா பாயமாக வரைந்தது.

A2 கோடானது இனப்பிரச்சனையின் பெயரால் இலங்கைத் தீவில் சீனா செல்வாக்குப் பெறுவதை சாத்தியமாக்கியது. இந்த வகையில் A1, A2 கோடுகள் பல்கிப் பெருகி சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை வடிவமைக்கத் தொடங்கியது.

### மேற்குலகுக்கு எரிச்சலையும் சினத்தையும் உண்டாக்கியது.

இந்த [illegible] வலைப்பின்னல் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கு எரிச்சலையும் சினத்தையும் ஏற்படுத்தின.

இந்த வகையில் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை தானும் எடுப்பதன் மூலம் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் தானும் சர்வதேச வலைப்பின்னலில் ஒரு பங் காளியாகும் வியூகத்தை வகுத்தது.

இனப்பிரச்சினையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தற்போது தமக்கு சாதகமானது எனக்கருதும் மேற்குலகம் புலிகளால் தாம் நெருக்கடிக்குள்ளாகிவிட்டதாகக் கருதும் நிலையில், புலிகளுக்கு எதிராக மக்கள் ஆதரவைப் பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மகிந்த அரசாங்கத்திற்கு உதவுதன் மூலம் புலிகளை தோற்கடித்து தனது உறவை சிங்கள மக்களின் ஆதரவுடன் இலங்கையில் பலப்படுத்த விரும்புகின்றது.

மேற்குலக நோக்கு நிலையானது மகிந்தவிற்கு A3 மேற்குலக நட்புக்கோட்பாட்டை பரிசளித்துள்ளது.

அதேவேளை ஏகாதிபத்திய சந்தை வலைப்பின்னல் A4 நட்புக்கோட்டை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த நிலையில் A1, A2, A3, A4 போன்ற நட்புக் கோடுகளினால் மகிந்த பலம் பெற்று இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக மகிந்த நிகழ்ச்சி நிரல் பலம் பெறுவதாக அமைந்தது.

இந்நிலை கிழக்கு மாகாண அனுபவத்தின் மூலம் நிருபணமாகி விட்டது.

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

அதாவது, கிழக்கில் இராணுவ ரீதியாக புலிகளை தோற்கடிக்க வேண்டும் என்பதே இந்தியாவின் நிகழ்ச்சி நிரல்.

ஆனால் மகிந்த இது விடயத்தில் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலைப் பயன்படுத்தி கிழக்கில் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்டு விட்டு தனது நிகழ்ச்சி நிரல்படி கிழக்கை அரசியல் ரீதியாக பரிபாலனம் செய்யும் பணியில் ஈடுபட்டார்.

இந்த இடத்தில் தான் புதுடில்லியில் இருந்து மாகாண சபைத் தேர்வின் பின்பு மாகாண அரசு அமையும் விடயத்தில் தனக்குப்பொருத்தமான அழுத்தத்தைப் பிரயோகிக் தொடங்கியது.

அதாவது. ஒரு முஸ்லிம் முதலமைச்சரின் கைக்கோ அன்று சிங்கள முதலமைச்சர் ஒருவரின் கைக்கோ கிழக்கு போய் விடக்கூடாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

ஆனால், கிழக்கை கபளீகரம் செய்யும் விடயத்தில் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலை விட மகிந்த நிகழ்ச்சி நிரல் நடைமுறையில் மேலோங்கிவிட்டதை இந்திய இராஜதந் திரிகள் கண் டுகொள் ளத் தொடங்கினர்.

இந்தியாவின் தூர நோக்கு கண் ணாடிப் பார்வை இராஜ தந்திரம் (BINOCULARS DIPLOMACY) தோல்வியடையவே, பருந் துப் பாச்சல் யதார்த்த இராஜதந்திரத்திற்கு தாவ வேண்டி ஏற்பட்டது.

ஆனால், சிங்கள இராஜதந்திர குஞ்சுக் கோழிகளுக்கு இந்தப் பருந்துப் பாய்ச்சலிலிருந்து தப்பிப் பிழைக்கும் பதுங்கற் தந்திரம் நன்றாகத் தெரியும்.

எனவே, தற்போது நிகழ்வது இந்திய இராஜதந்திரிகளின் பருந்துப் பாய்ச்சலும் சிங்கள இராஜதந்திரக் குஞ்சுகளின் பதுங்கல் பீடிகையும்தான்.

இதன்படி நாராயணன் குழுவின் வெளிப்படையான அரசியற் பிரகடனம் என்னவெனில் வடக்குக் கிழக்கு ஓர் அலகாக இருக்கக்கூடிய அரசியற் தீர்வை மகிந்தவிடம் வலி யுறுத்துவது.

அடுத்து உள்ளோட்ட அரசியல் இராணுவ நோக்கின் படி புலிகளுக்கு எதிரான வன்னி மீதான தாக்குதலை முழு அளவில் எடுக்குமாறு வற்புறுத்துவதும் அதற்கு இராணுவ ரீதியாகத் தாம் உதவுவதாக உறுதியளிப்பதும்.

அடுத்து இறுதியாக தமது வருகையின் மூலம் இலங்கைத்தீவு இந்தியாவின் கொல்லைப் புறம் தான் என்பதை உலகிற்கு பறைசாற்றும் ஓர் இராஜதந்திரப் பரிபாசையாக்குவது.

இந்தியாவின் நாராயணன் குழுவின் விஜயத்தின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினையானது அரசியல் இராணுவ அம்சத்தில் மேலும் சூடு பிடிப்பதற்கான சர்வதேசக் களமாய்த் தூண்டப்பட்டுள்ளது.



எந்தவொரு அரசும் தமிழ் மக்களின் வாழ் நிலையைக் கருத்திற் கொண்டு தமது அரசியல் நகர்வுகளை மேற் கொள்வார்கள் என்றில்லை.

### தமிழ் மக்களின் வாழ்வு அவர்களுக்குப் பொருட்டல்ல

அவர்களுக்கு அப்பாவிகளான சிறிய இனமான தமிழ் மக்களின் வாழ்நிலையோ துயரமோ பொருட்டல்ல.

அரசுகள் தத்தமது தேவைகளுக்கேற்ப இலங்கை அரசியலில் தமது இடத்தைப் பேணுவதற்கான "மனிதநேய" "மனித உரிமை", "சேவாதார உதவி" போன்ற வேடங்களை அணிவார்களே தவிர தமிழரின் வாழ் நிலைப் பொருட்டல்ல.

எனவே நாராயணன் குழுவின் விஜயத்திலிருந்து தோன்றக்கூடிய தமிழரின் வாழ் நிலை என்னாகும் என்பதே தற்போதைய முதற்தரக் கேள்வியாகும்.

அடுத்து சிங்கள இராஜதந்திரம் எப்படி இந்நிலையைக் கையாளப்போகின்றது என் கேள்விக்கான பதில் முக்கியமானது.

மூன்றாவது தமிழ்மக்களின் பக்கத்தில் இவை எவ்வாறு வடிவம்பெறப்போகின்றன? அதில் கிழக்கின் பங்கும் பாத்திரமும் என்ன? முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு எப்படி அமையப் போகின்றது? இறுதியில் யாருக்கு இலாபம்?.


LAVA HOSPITAL
லாவா வைத்தியசாலை
75, Temple Road, Jaffna/75, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
யாழ்.போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்களின் சிகிச்சைகள் வாரந்தோறும்
* பெண்நோயியல், மகப்பேற்று நிபுணர் - வியாழன் பி.ப.4 மணி
* சத்திரசிகிச்சை நிபுணர் - திங்கள் நண்பகல் 12 மணி
* பொது வைத்திய நிபுணர் - வெள்ளி பி.ப.5 மணி
* இதய வைத்திய நிபுணர் - செவ்வாய் பி.ப.4 மணி
(பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்)
இயக்குநர்
தொ.பே: 021 222 7251


யாழ்.தென்மராட்சி வரணி குடமியன்
திருவருள்மிகு
ஆதிசிவன் தேவஸ்தான
ஆவர்த்தன, அஷ்டபந்தன பிரதிஷ்டா
மகா கும்பாபிஷேகப் பெருவிழா
03.09.2008
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் வருஷருது ஆவணிமாதம் 18ஆம் நாள் (03.09.2008) புதன்கிழமை சித்திரா நட்சத்திரமும், சுக்ல பக்ஷ விநாயகர் சதுர்த்தித் திதியும், சித்தயோகமும் கூடிய சுபநன்நாளில் காலை 6.17 மணி தொடக்கம் 7.35 மணி வரையுள்ள சந்திரகோரையுடன் கூடிய கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் எம்பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் ஆவர்த்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதால் அடியார்கள் அன்றும் அதற்கு முதல் 2 தினங்கள் நடைபெறும் பூர்வாங்கக் கிரியைகளைத் தரிசித்து ஆதிசிவன் திருவருள் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வார்களாக.
கிரியாகார நிகழ்ச்சிகள்
ஆவணிமாதம் 17ஆம் நாள் (02.09.2008) செவ்வாய்க்கிழமை
காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் நடைபெறும்.
காலை 9 மணிக்கு புண்ணியாகவாசனம், விஷேடசந்தி, யாகபூசை, மூலமந்திர ஹோமம், காயத்திரி ஹோமம், யாக தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்கல்.
மாலை 4.30 மணிக்கு ஆலய சுத்தி, புண்ணியாக வாசனம். பிம்பசுத்தி, பிம்பரக்ஷாபந்தனம், நியாசங்கள், யாகபூசை, பூர்வபக்ஷிம சந்தானம், விஷேச திரவிய ஹோமங்கள், ஸ்பர் சாகுதி, தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்கல்.
ஆவணி மாதம் 18ஆம் நாள் (03.09.2008) புதன்கிழமை
அதிகாலை 5.30 மணிக்கு புண்ணியாகவாசனம், யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, அந்தர்பலி, பகிர்பலி, யாக தீபாராதனை, யாத்திராதானங்கள், கிரகப்பிரீதி கும்பங்கள் வீதிப்பிரதட்சணம் சுபமுகூர்த்தத்தில் ஸ்தூபி அபிஷேகம் மஹா கும்பாபிஷேகம், தசதர்சனம், எஜமான் அபிஷேகம், ஆசியுரை, மஹா அபிஷேகம், விஷேஷ பூஜை, சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வருதல், அருட்பிரசாதம் வழங்கல் அன்னதானம் இடம்பெறும்.
குடமியன்
ஆதிசிவன் தேவஸ்தானம்.
ஆலய பரிபாலனசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடவன்னி"ப் பிரதேசத்தில் நிலத்தின் ஆழத்தில் நிறைய நன்னீர் உண்டு

யாழ்.குடாநாட்டின் தரைக்கீழ் நீர் வளத்தைப் பெருக்குவதற்கான மற்றும் பாவனைக்குட்படுத்துவதற்குமான தரவுகள், தகவல்கள், ஆலோசனைகள் அடங்கிய




ஓர் ஆக்கத்தினை 29.06.2008 திகதிய தங்களது நாளேட்டில் பார்த்தேன்.

யாழ்.குடாநாட்டினைப் பொறுத்தமட்டில் மேற்படி ஆக்கம் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

மேற்படி ஆக்கத்தில் "புத்தளம், பரந்தன், முல்லைத்தீவை இணைக்கும் கோட்டிற்குத் தெற்காக உள்ள பிரதான நிலப் பகுதியில்" என்று குறிப்பிடப்பட்டு "அப் பகுதியில் அதிக செலவில் குழாய்க் கிணறுகள் அமைத்தே தரைக் கீழ் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த முடியும்" என்று உள்ளது.

**நன்னீர் காணப்படுகிறது**

மேற்படி கூற்றை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது என அபிப்பிராயப் படுகின்றேன். உண்மையில், பிரதான நிலப் பகுதிக்குள் அடங்கும் குறிப்பிட்ட கோட் டிற்கு மேலேயும் (வட மேற்கு-வடக்கு-வட கிழக்கு) யாழ். குடாநாட்டில் போலல்லாமல் நிலத்தடியில், ஆழத்தில், நன்னீர் காணப்படுகின்றது.

ஆகவேதான், 'வட வன்னிப் பிரதேசம்' எனக் குறிப்பிடக்கூடிய மேற்படி கோட்டிற்கு மேலே உள்ள பிரதேசத்தில் ஆழமான, பாரிய திறந்த கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீரை (தரைக்கீழ் நீரை) வெளிக் கொணர வேண்டியதாக உள்ளது. அருகில் காணப்படும் வரை படம் நிலைமையை தெளிவாக்க உதவும்.

இப்படிப் பெறப்படும் நீரைக் குறிப்பாக பாரிய அளவிலான மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக் கும், மழைநீரைத் தேக்கி வைக்கும் ஏற்பாடான குளங்களிலிருந்து பெறப் படும் தரை நீருடன் இணைத்து தாழ் நிலப் பயிர்ச்செய்கைக்கும் பாவிக்கக் கூடிய (தேவைப்படின் மட்டும்) வாய்ப்பு உள்ளது.

**இன்றும் பலன்தரும்**
**30 வருடங்களுக்கு**
**முந்திய திட்டம்**

இந்த யதார்த்தத்தை உணர்ந்தே கடந்த 30 வருடங்களுக்கு முன் இப் பகுதிகளில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பணப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தீவிரமாக்கப்பட்டன. இத்தகைய திட்டங்களுள் அடங்கும் விசுவமடுத் திட்டம், முழங்காவில் திட்டம் போன்றவை இன்றும் எதிர்பார்த்த பலன்களைத் தந்த வண்ணம் உள்ளன. (தற்போதைய போர் நடவடிக்கைகளால் ஏற்படக்

## மேட்டுநில மற்றும் தாழ்நிலப் பயிர்ச் செய்கைக்குப் பாவிக்கலாம்

கூடிய மாற்றங்கள் ஈண்டு கருத்தில் கொள்ளப்படவில்லை.)

எனது அனுபவத்திற்கும் அறிவிற்கும் எட்டிய அளவில் மேற்படி "கோட்டிற்குத்

S.T.பத்மநாதன்,
முன்னாள் விவசாயப் பிரதிப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு

தெற்கே உள்ள பிரதான வன்னிப் பிரதேசத்தில் நிலத்தடி (தரைக்கீழ்) நீரைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமத்தை எதிர் கொள்ள வேண்டியுள்ளது-முக்கிய காரணம்: மேற்படி பிரதான வன்னிப் பிரதேசத்தின் நில அமைப்பில் தரைக்குக் கீழே கருங்கற்பாறை (Granite Rock) காணப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான தகவலை வெளிக்கொணருவது அவசியமானது என நான் கருதுகிறேன்.

1970 களின் பிற்பகுதியில் பிரித்தானிய அரசின் வெளிநாடுகளின் அபிவிருத்தி நிர்வாக அமைப்பு (Overseas Development Administration-ODA) இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையின் "வட-மேற்கு உலர் வலய பிரதேச (North-West Dry Zone)" நில, நீர் வள அபிவிருத்தி சம்பந்தமான ஓர் ஆய்வை மேற்கொண்டது. 1979 இல் ஆரம்பிக்கப்பெற்ற இம் முயற்சி 1983 அளவில் முடிவடைந்தது.

ஆய்வின் முடிவில், இவ் ஆய்வு சம்பந்தமான அதி முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதாக அறியக்கிடந்தது. மேற்படி அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு அன்றைய இலங்கைக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு "வட-மேற்கு காணி மற்றும் நீர்வள அபிவிருத்தித் திட்டம்-இலங்கை" என்று தலையங்கமிடப்பெற்ற சுருக்க அறிக்கை ஒன்றினை 1983 இல் வெளியிட்டது.

மேற்படி அறிக்கை, எதிர்காலத்தில் யாழ். குடாநாட்டிற்கு வெளியே வட பிராந்தியத்தில் நிலத்தடி நீர் (தரைக்கீழ் நீர்) மற்றும் நில வள அபிவிருத்தி, நில-நீர் பாவனை போன்ற விடயங்களில் ஈடுபடுவோருக்கு இன்றியமையாத உசாத்துணை நூலாக அமையும்.

******************

# யாழ். வைத்தியசாலை இடநெருக்கடியைத் தீர்க்க மானிப்பாயில் விடுதிகள் அமைக்கப்படும்

## புதிய வைத்தியசாலைத் திறப்புவிழாவில் மாகாணச் செயலாளர்

நவாலி, செப்.2

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் இடநெருக்கடியைக் குறைக்கும் விதத்தில் மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகள் பல அமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதி ஒதுக்கப்படும்.

இத் தகவலை வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.குமாவேற்பிள்ளை தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் திறப்புவிழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இத்திறப்புவிழா நிகழ்வில்பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

மக்களின் பங்களிப்புடன் கொள்வன்வு செய்யப்பட்ட 20 பரப்புக் காணியில் பிரசவ விடுதி, ஆண்கள், பெண்கள் விடுதி, வைத்தியர்கள், ஊழியர்கள் தங்கும் விடுதி என்பன உடனடியாக அமைக்கப்பட வேண்டும். அரசினால் வழங்கப்படும் நிதி தற்போது மிகக்குறைவாகவேயுள்ளது. அதனைக் கொண்டே சகல வைத்தியசாலைக்கும் வழங்க வேண்டியுள்ளது. ஆதலால் அரசுடன் கதைத்துக் கூடுதல் நிதி பெறுவதற்கு முயற்சி எடுத்துள்ளேன்- என்றார்.

நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டைத் திரை நீக்கம் செய்து வைத்தபின் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

மக்களின் பங்களிப்புடன் வைத்திசாலை அபிவிருத்திச் சபையினரின் அயராத முயற்சியினால் கட்டி முடிக்கப்பட்டு மேலோங்கி நிற்கும் இவ் வைத்தியசாலையில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்குநடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

முதலில் எம்.பி.பி.எஸ் தரமுள்ள டாக்டர் ஒருவரை நியமனம் செய்யவுள்ளோம். செயலாளரின் உதவியுடன் விடுதிகள் அமைக்கப்படும். இதன் மூலம் இப் பிரதேச மக்கள் போதனா வைத்தியசாலைக்கு செல்லாமல் இங்கேயே சிகிச்சை பெற்று குணமடையமுடியும்.இவ்வைத்தியசாலையை அமைப்பதற்கு உதவிய யாழ். அரச அதிபருக்கும் பங்களிப்பு செய்த இப் பிரதேச மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார். (202-100)





*ஆனைக்கோட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் அருகில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், யாழ் மாவட்ட மலேரியாத்தடுப்பு பொறுப்பு அதிகாரி கே.ரி.சிவபாதம் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.*

*யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியசாலையின் கல்வெட்டை திரை நீக்கம் செய்வதை கீழே உள்ள படத்தில் காணலாம்.*

*(படங்கள்: நவாலி செய்தியாளர்)*

### மனித உரிமை ஆணைக்குழு வரவேற்கின்றது

# இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்புக்கான சட்டமூலம் குறித்த பொதுமக்கள் கருத்துகள்

கொழும்பு, செப்.2

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்புக்கென சட்ட மூலம் ஒன்று வரையப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. இச்சட்ட மூலம் தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துகளையும் விமர்சனங்களையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வரவேற்கின்றது.

தொடர்புகொள்ள விரும்புகிறவர்கள் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான செயற்திட்டம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 65/1, முத்தையாபிள்ளை ஒழுங்கை, வோட்பிளேஸ், கொழும்பு 7. என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மனித நடவடிக்கைகள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களினால் இடம்பெயருகின்ற மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் சமூக, பொருளாதார அடிப்படையில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குமாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பதற்கான சட்டமூலமானது, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தரதீர்வுக்குமான செயற்திட்டத்தினால் 2008 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 8 ஆம் திகதி, அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகளிற்கான கௌரவ அமைச்சர் திரு. மகிந்த சமரசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதனையும் மேம்படுத்துவதனையும் பிரதான இலக்காகக் கொண்டு இவ்விசேட செயற்திட்டம் 2002 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடங்கிய காலம் முதல் இன்றுவரை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள், நலன்புரி விடயங்கள் தொடர்பாக வருகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதோடு அவர்களின் சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்களை முன்னேற்றுவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் லயன்ஸ் கழக பதவியேற்பு நிகழ்வு அண்மையில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்திலும் முன்னாள் மாகாண சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கல்வி) இ.சிவானந்தன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஏ.சற்குணநாதன் மற்றும் முன்னாள் சர்வதேச லயன்ஸ் கழகப் பணிப்பாளர் லயன் சக்கரவர்த்தி விஜயநாதன் ஆகியோர்கள் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். சாதனையாளராகத் தெரிவுசெய்யப்பட்ட வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் லயன்ஸ் சக்கரவர்த்தி விஜயநாதனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் அருகில் பிரதேச செயலரின் பாரியார் திருமதி ஜக்குலின் மோகன்றாஸ் நிற்பதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: கோப்பாய் செய்தியாளர்)

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கு ஐந்து அமைப்புகள் கூட்டாகக் கண்டனம்

கொழும்பு,செப்.2

பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் ஊடகவியலாளர்கள் மருத்துவபீட மாணவர்களால் தாக்கப்பட்டமை குறித்து இலங்கையின் ஐந்து பிரதான ஊடக அமைப்புகளும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

மாற்றுக் கருத்தை முன்வைப்பவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் கலாசாரத்திற்கு புத்துஜீவிகள் எனக் கருதப்படும் மருத்துவபீட மாணவர்களும் பலிக்கடாக்கள் ஆகியிருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள ஊடக அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து அவை வெளியட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

'லங்காதீப' சிங்களச் செய்தித்தாளிற்கு தாமாகவே முன்வந்து கருத்துத் தெரிவித்த மருத்துவபீட மாணவனை புகைப்படமெடுக்க முயன்றவேளை ஊடகவியலாளர்கள் யமுனா ஹர்சனியும், ஜனக கலபதியும் தாக்கப்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் அந்த இடத்திற்குச் சென்ற 'சிரச' தொலைக்காட்சி ஊடகவியலாளர் துஸ்யந்த மனோஜ் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து மூன்று புகைப்படக் கருவிகளும் பறிக்கப்பட்டுள்ளன. ஐந்து ஊடக அமைப்புகளும் இதனைக் கடுமையாக கண்டிக்கின்றன.

மருத்துவபீட மாணவர்களே தாக்குதலை மேற்கொண்டனர் என இனங்காணப்பட்டுள்ளது. இதனை விட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றமை மிகவும் துரதிஷ்டவசமானது.

மருத்துவபீட மாணவர்களின் இந்தச் செயற்பாடு ஊடகங்களின் பணிகளில் தலையிடுவதாகவும் மேலும் மக்களுக்கு தகவல் பெறுவதற்கு உள்ள உரிமையை மீறுவதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துவரும் மாற்றுக் கருத்தை முன்வைப்பவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் கலாசாரத்திற்கு புத்திஜீவிகள் எனக் கருதப்படும் பல் கலைக்கழக மாணவர்களும் பலியாகியுள்ளனர். (அ-சி)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



**மகாதேவா தனருபன்**

(செல்வா)

தாயின் மடியில் பூவாக
29*01*1984

லொறிப் பாதகனின் கொடூர அழிப்பில் சருகாக
30*08*2003

திதி: திருதியை (02.09.2008)

நேற்றுப் போலுள்ளது எல்லாமே
உருண்டோடியது ஐந்து வருடங்கள்
ஆனாலும் இதயம் முழுவதும் துள்ளித் திரியும் சிட்டாக நீயடா
செல்வா நீ எம்மோடு இல்லையென்பதை நம்ப மறுக்கிறது
நம் உள்ளம் நாம் உள்ளவரை நீ இருப்பாயடா
எம்மோடு உயிரினில் உயிராக உணர்வினில் உணர்வாக.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (77594)

உன் பிரிவால் துடிக்கும்:
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, தங்கை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கலாநிதி (எந்திரி) ச.சு.சிவகுமார்**

(பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், முல்லைத்தீவு பிராந்தியம்)



எமது திணைக்களப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ச.சு.சிவகுமார் அவர்கள் பொறியியல் துறையில் நிலத்தடி நீர் ஆய்வுக் கற்கையை மேற்கொண்டு அக்கற்கையை சிறப்புற முடித்து 'கலாநிதி' எனும் பட்டம் பெறுவதையிட்டு அவரை வாழ்த்துவதுடன் அவரது வாழ்வில் இன்று 02.09.2008 தனது 49ஆவது அகவையை முடித்து பொன்விழா அகவை காணும் அவருக்கு, அவர் தம் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புடன் வாழ்ந்து எமது தேசத்துக்கும் மாவட்டத்துக்கும் தமது சேவையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென அவரை வேண்டி வாழ்த்துகின்றோம். (77564)

அனைத்துப் பணியாளர்கள், நலன்புரிச் சங்கம், நீர்ப்பாசனத் திணைக்களம்,
முல்லைத்தீவுப் பிராந்தியம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் இராமலிங்கம் பஞ்சாட்சரம்**

(யாழ்.மாநகர சபை சுகாதார மேற்பார்வையாளர்)



பிறப்பு 08*10*1951
இறப்பு 10*09*2006

திதி: 02.09.2008

ஆண்டுகள் இரண்டு போனாலும்
ஆறிடுமோ எமது உள்ளம்
கடலலை போல் உங்கள் நினைவு
ஓயாமல் நிலைத்திருக்கும்
எங்கள் இதயமதில் என்றும்.

6, மணல்தறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (77609)

மனைவி,
பிள்ளைகள்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மனம் மகிழ
17 * 07 * 1940



மனம் நெகிழ
18 * 08 * 2004

**அமரர் பொன் நடேசன்**

(இளைப்பாறிய அதிபர்)

திதி: திருதியை (02.09.2008)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததினால்
வானுறையும் தெய்வமாகினீர்''

உங்களைக் காணாத கண்ணிருந்தும் ஒளி இழந்தது..........
உங்களை நினைக்காத நெஞ்சிருந்தும் நினைவிழந்தது...........
நீங்கள் சொல்லாத சொல்லிருந்தும் செயலிழந்தது..............
நீங்களிலில்லாமல் நாம் நான்காம் ஆண்டிலும் நடுவழியில்தானே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (சி/554326)

என்றும் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

# கோப்பாய் கோட்டத்தில் இரண்டு பாடசாலைகளுக்கு சமையல் கூடம்

கோப்பாய்,செப்.2

கோப்பாய் கோட்டத்தில் உள்ள இரண்டு பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் சமையலறைக் கூடம் அமைக்கப்படவுள்ளது.

ஊரெழு கணேசா வித்தியாலயம், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே சமையல் கூடம் அமைக்கப்படவுள்ளது.

(203-72)

# வீடு அமைப்பதற்கு லொத்தர் அடிப்படையில் சமுர்த்திக் குடும்பங்கள் தெரிவு

கோப்பாய்,செப்.2

சமுர்த்தி முத்திரை எடுக்கும் குடும்பங்களில் மூன்று குடும்பங்கள் லொத்தர் அடிப்படையில் வீடுகள் அமைப்பதற்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி அதிகார சபையினாலேயே இக்குடும்பங்கள் லொத்தர் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(203-72)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
15 * 12 * 1962



மறைவு
20 * 07 * 2008

**அமரர் வல்லி வைத்திலிங்கம்**

20.07.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.09.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரவெட்டி மேற்கு,
ஸ்ரீநாரதா வித்தியாலயத்துக்கு முன்பாக. (77574)

குடும்பத்தினர்
வை.கிஜோஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலலை அள்ளிச் சென்ற உறவுகள்

சுனாமி பேரலைத் தாக்கத்தினால் தனது குடும்பத்தினர் அனைவரையும் இழந்துள்ள தம்பிராசா மகேஸ்வரன், அவர்களுக்கான நினைவாலயம் ஒன்றை தனது கிராமத்தில் அமைத்துள்ளார். மட்டக்களப்பின் நாவலடி கிராமத்தைச் சேர்ந்த அவர், கடந்த 2004 இல் தனது மனைவி, நான்கு பிள்ளைகள், மாமா, மாமி, மைத்துனி, மற்றும் ஏனைய உறவுகள் என 75 பேரை இழந்துள்ளார். உறவுகளை இழந்து 3 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட மீளாத் துயரில் அவர்களின் நினைவுகளுட னேயே வாழும் மகேஸ்வரன் தனது ஏக்கத்தை மீண்டும் வாழ்வோம் குழுவினருடன் பகிர்ந்து கொண்டார்.

'பிறப்பு வளர்ப்பு எல்லாம் இந்த நாவலடி கிராமத்தில் தான். பரம்பரையாக நாங்கள் இங்கு தான் வாழ்ந்து வருகின் றோம். கரைவலை வாடி நடத்தி வந்தோம். மாமா, மாமி, மச்சாள், என்னுடைய நான்கு பிள்ளைகள் அனைவரும் சுனாமியில் இறந்து விட்டார்கள். மருமகள்மார் அவர்களுடைய பிள்ளைகள் என்று எங்களுடைய சொந்தங்கள் மட்டுமே 75 பேர் வரை இறந்துவிட்டார்கள். இரண்டு மாதங்களின் பின் நான் தற்கொலை செய்து விடுவோமோ என்று சிந்தித்தேன். என்னைப் பார்ப்பதற்கு மனைவி மக்களோ உறவினர்களோ இல்லை. பின்னர் அவர்களுக்காக நினைவாலயம் கட்ட வேண்டும் என்று நினைத்தேன். நான் கடவுளை வணங்குவதோ கோவிலுக்கு போவதோ இல்லை. அவர்களைத்தான் தெய்வமாக நினைத்து வழிபட்டு வருகிறேன். நான்கு லட்சம் ரூபாய் செலவழித்து என்னுடைய சொந்தப் பணத்தின் மூலமும் என்னுடைய மனைவியின் பணத்தைக் கொண்டும் இந்த நினைவாலயத்தை அமைத்தேன்.

எங்களுடைய வீடு சுனாமியில் முழுவதுமாக அழிந்துவிட்டது. அதனால் BHBD நிறுவனம் எனக்கு வீடு கட்டித் தந்து உதவியது. எனக்குப் பிறகு யாரும் இல்லை. அதனால் இந்த வீட்டில் நானும் என் மைத்துனரும் வசித்து வருகின்றோம். நான் கோயிலுக்குத் தேவையான நிதி உதவிகளைச் செய்வதுண்டு. ஆனால் கடவுளைக் கும்பிட விரும்புவதில்லை. என்னுடைய மனைவி பிள்ளைகள், உறவினர்கள் அனைவரும் கோயில் பணிகளை அதிகமாக செய்து வந்தார்கள். என்னுடைய மூத்த மகன் கோயில் வேலைகளை செய்யும்போது மின்சாரம் தாக்கி கோயிலுக்குள் ஒரு நாள் விழுந்து கிடந்தார். அந்தளவிற்கு பத்தியாக இருந்தவர்களை கடவுள் காப்பாற்றவில்லை.

தேன்கூட்டைக் கல்லால் எறிந்து கலைத்ததுபோல் நாவலடி கிராமம் கலைந்து விட்டது. 85 குடும்பம் மட்டும்தான் மிஞ்சியது. தற்போது அவர்களில் சிலர்தான் நாவலடி கிராமத்தில் இருந்து வருகின்றார்கள். என்னால் தற்கொலை செய்துகொள்ள முடியவில்லை. கடவுள் எனக்கு விரைவில் இறப்பைத் தரவேண்டும் என்றுதான் தினமும் பிரார்த்தித்துக் கொண்டு இருக்கின்றேன். வாழ்வதற்கே எனக்கு விருப்பம் இல்லை.

வாழ விரும்பாத நிலையிலும் கூட இழந்த தன் குடும்பத்தினரின் நினைவுகளை சுமந்தபடி வாழ்ந்துகொண்டிருக்கும் தம்பிராசா மகேஸ்வரனைப் போல் இன்னும் எத்தனையோ பேர் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருப்பது உண்மையே. அமைதியான கடல் ஒரு சில மணிநேரம் கரையைத் தாண்டியதில் எத்தனை கல்லறைகள் உருவாகின? எத்தனை பேர் நடைப் பிணமாகினர்?

*(நன்றி: INTERNEWS மீண்டும் வாழ்வோம்)*

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.2

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. (203)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.2

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று இடம்பெற மாட்டாது. எதிர்வரும் 9ஆம் திகதிக்கு இது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (203)

## மோட்டார் சைக்கிளுடன் மோதி வயோதிபப் பெண் காயம்

நாவற்குழி, செப்.2

வீதியின் குறுக்கே சென்ற வயோதிபப் பெண் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதனால் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நாவற்குழிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் நாவற்குழிச் சந்தியைச் சேர்ந்த திருமதி காளிமுத்து செல்லம்மா (வயது 70) என்பவர் வலது காலில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-288)

## வாசகர் திருமுகம்

### வன்னியில் துயர்படும் எம் உறவுகளுக்கு உதவுவோம்

இன்று வன்னியில் தமிழ் மக்கள் யுத்தத்தால் - இடம்பெயர்வுகளை, பேரவலங் களை சந்தித்து அடிப்படை வசதிகள் இன்றி மர நிழலில் பசியுடன் வாழ்ந்து வருகின் றனர். எமது இரத்தத்தின் இரத்தங்களுக்கு நாம் கைகொடுக்க வேண்டாமா? இந்த வகையில் யாழ்.ஆயரின் வேண்டுகோளுக்கு அமைய வன்னியில் வாடும் மக்களுக்காக கத்தோலிக்க தேவாலயங்களில் நிதி சேகரிப்புகள் இடம்பெற்று வருவது மகிழ்ச்சி தருகின்றது.

ஆதீனங்கள், சன்னிதானங்கள், மடத்தலைவர்கள், மிசன் துறவிகள், பிராமண உத்தமர்கள் எனக் கூறிக்கொள்பவர்களும், இந்து சமயப் பேரவை இந்து இளைஞர் பேரவை, சைவபரிபாலனசபை, ஆலயப்பரிபாலன சபை போன்ற இந்து நிறுவனங்களும் மௌனம் சாதிக்கின்றன. மக்கள் பணி மகேசன் பணியல்லவா?

பத்திரிகைகளுக்கும் விழாக்களுக்கும் ஆசி உரை வழங்குவது மட்டும் மதப்பணி ஆகி விடுமா? சிந்தியுங்கள், செயற்படுங்கள், வழிகாட்டுங்கள்; துயர் துடையுங்கள்.

யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது யாழ்.மக்களாகிய எம்மை அரவணைத்து வந்தாரை வாழ வைத்த மண் வன்னி மண் அல்லவா? கைகொடுப்போம் குரல் கொடுப்போம் வன்னி மக்களின் துன்பங்களை நீக்க உதவுவோம்.

கூட்டுறவுத் துறையினரும் தனியார் துறையினரும் சனசமூக நிலையங்களும் பல்கலைக்கழக சமூகங்களும் தொழிற்சங்கங்களும் வன்னி மக்களுக்கு இந்த வகையில் சிந்தித்து துயரக் கடலில் சிக்கித் தவிக்கும் எம் மக்களுக்கு உதவ வேண்டாமா?

*யாழ்ப்பாணம்.* சந்திரன்.

### இந்தப் பாதைகளைத் திருத்தி உதவ மாட்டார்களா?

யாழ்ப்பாணம், சிறாம்பியடி ஒழுங்கையில் ஆரம்பமாகி காளி கோயிலடி ஊடாக நாவலர் வீதிவரை செல்லும் யாழ்.வீதி 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் கல்லுகள் சிதைவடைந்து குன்றும் குழியுமாக மழை காலத்தில் பாதசாரிகளும் அவ்வீதி வாழ் மக்களும் பல சிரமங்களை எதிர் நோக்கும் நிலையில் சீரழிந்து காணப்படுகிறது. இங்ஙனமே யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் புகையிரதக் கடவையிலிருந்து ஆரம்பமாகி கிழக்குப்பக்கமாக கச்சேரி நல்லூர் வீதிக்கு ஏறும் புகையிரதப் பாதை வீதியும் பலகாலம் திருத்தப்படாமல் சீரழிந்து மழைகாலங்களில் நீர் தேங்கி பாதசாரிகளும் அவ்வீதி வாழ் மக்களும் வாகனங்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கும் நிலையில் காணப்படுகின்றது. எமது கழகம் எடுத்த தொடர் முயற்சியால் இராசாவின் தோட்டம் வீதியிலிருந்து புகையிரதப்பாதை வீதிக்கு கிரவல் போட்டு 200 யார் தூரம் செப்பனிடப்பட்டு யாழ்.மாநகரசபையினரால் திருத்தப்பட்டது. ஆனாலும் அவை மழையால் சேதமுற்று அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதி வரை குன்றும் குழியுமாக மக்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்கியே பயணிக்கும் நிலைமை காணப்படுகிறது.

இவை சம்பந்தமாக புகையிரதப்பாதை வீதி வாழ் மக்களும் யாழ்.வீதி வாழ் மக்களும் பல தடவைகள் மேற்படி ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழக நிர்வாகம் ஊடாகவும் நேரடியாகவும் வேறு கிராமிய நிறுவனங்கள் மூலமும் மகஜர்கள் கோரிக்கைகள் யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் பல அரச, அரசசார்பற்ற நிறுவ னங்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாநகரசபை நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் சமர்ப்பித்தும் 2 வருட காலத்துக்கு மேல் ஆகி யும் எதுவித பலனும் ஏற்படவில்லையென்பதை வருத்தத் துடன் அறியத் தருகின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பு நடவடிக்கை நிமித்தம் யாழ். ஏ-9 பாதை மூடப்படும் வேளைகளிலும் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி ஊடாக வாகனப் போக்குவரத்து தடைப்படும் போது பாதசாரிகளுக்கும் வாகனக்காரர்களுக்கும் அவ்வீதி வாழ் மக்களுக்கும் போக்குவரத்துப் பாதையாக மேற்படி இரண்டு வீதிகளும் மிகவும் அவசியமான பாதையாக திகழ்கின்றன. அப்பாதைகளை ஊடறுத்தே யாழ்.நகருக்கும் கச்சேரியடிக்கும் வாகனங்களும் பாதசாரிகளும் செல்லும் நிலையை அவதானிக்க முடிகின்றது.

எனவே கிராமிய மக்களது நலன்கருதியும் மேற்படி யாழ்.வீதி புகையிரதப் பாதை வீதி வாழ் மக்களது நலன்கருதியும் அனைத்து பயணிப்போர் நலன் கருதியும் இரண்டு வீதிகளையும் தார் போட்டு, கல்லிட்டு புனரமைத்து சீர் செய்ய சம்பந்தப் பட்ட அனைத்து நிறுவனங்களையும் உயர் அதிகாரிகளையும் மக்கள் நலன்சார்பாக விநயமாகக் கேட்கின்றோம்.

*ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

வ.க.ஜெயபாலன் ஜே.பி.
செயலாளர்.

உதயன் பத்திரிகை ஆசிரியருக்கு தமது குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி எழுதும் வாசகர்கள் தமது பெயர் மற்றும் முகவரிகளை தவறாமல் குறிப்பிடுவது அவசியம்

விடயத்தின் தன்மைக்கேற்ப அவைகளை வெளியிடுவதா இல்லையா என்பதை ஆசிரியரே முடிவு செய்வார். வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயம் மக்கள் நலன் நாடிய முக்கியமானதாக இருந்தும் பலர் தங்கள் பெயரைக் குறிப்பிடாது விடுவதால் அவற்றை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. அவற்றை புனைபெயரில் வெளியிடுவதனாலும் கூட எழுதியவர் யார் என்பது ஆசிரியருக்கு தெரிய வேண்டும். வாசகர்களின் பெயர் மற்றும் விலாசம் என்பன குறித்து இரகசியம் பேணப்படுவது பத்திரிகை மரபாகும். தயவு செய்து உங்கள் பெயர், விலாசத்துடன் எழுதுங்கள் என்று விநயத்துடன் கேட்டுக் கொள்கிறோம்.

# இலங்கையில் குண்டுச் சத்தங்களும் மரண ஓலங்களும்தான் கேட்கின்றன

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

இராமநாதபுரம், செப். 02

இலங்கையில் எங்கு பார்த்தாலும் வெடிகுண்டுச் சத்தங்களும் மரண ஓலங்களும்தான் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இரவு வேளைகளில் முகமூடி அணிந்தவர்கள் வீட்டுக் கதவைத் தட்டி இளைஞர் - யுவதிகளைக் கடத்திச் செல்கின்றனர்.

வன்னியில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான சண்டை தீவிரமாகி வருகிறது. அங்குள்ள மக்கள் பேரவலப்படுகின்றனர்.

- இவ்வாறு தமிழகம் சென்றடைந்த அகதிகள் தெரிவித்துள்ளனர் என தமிழக நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நாளேட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை மன்னார் மாவட்டத்திலிருந்து நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அரிச்சல் முனைப் பகுதியில் வந்து இறங்கினர்.

இவர்களில் அகதி ராதா என்பவர் (வயது 35) கூறுகையில் -

இலங்கையில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகளால் இளைஞர்கள் வெளியில் செல்லப் பயப்படுகிறார்கள். எங்களால் அங்கு பிழைப்பு நடத்த முடியவில்லை

குழந்தைகளுக்கான பால்மாக்கள் கடைகளில் கிடைப்பதில்லை. 23 வயது முதல் 30 வயது உள்ளவர்களை இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெறவேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர். இரவில் முகமூடி அணிந்தவர்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டுகின்றனர். எங்கு பார்த்தாலும் வெடி குண்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. நாங்கள் உயிருக்குப் பயந்து அகதிகளாக தமிழகம் வந்திருக்கிறோம் - என்றார். (சி)

# அலரிமாளிகை பாதுகாப்பு வலயத்தில் கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை

கொழும்பு, செப்.2

அலரி மாளிகையைச் சுற்றியுள்ள உயர்பாதுகாப்பு வலய பகுதிக்குள் ட்ரக் உட்பட கனரக வாகனங்கள் செல்வதற்கும், கூட்டங்கள், பேரணிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் அரசு தடை விதித்துள்ளது.

இதனை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் குறித்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் ட்ரக் அல்லது 'டிரெயிலர்' லொறியுடன் நுழைய வேண்டுமானால் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தரத்திற்கு குறையாத அதிகாரியொருவரின் எழுத்து மூல அனுமதியைப் பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன. இதனை முதல் தடவையாக மீறுபவர் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். இரண்டாவது தடவை மீறினால் 10 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டியிருக்கும். மூன்றாவது தடவையும் மீறினால் நீதிமன்ற உத்தரவின் மூலம் வாகனம் பறிமுதல் செய்யப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# தமிழ்த் தாய்க்கு இலங்கையில் முதல் முதல் சிலை நிறுவப்படுகிறது

கொழும்பு, செப்.2

தமிழ்த் தாய்க்கு உருவச் சிலை அமைக்கும் பணி கடந்த சனிக்கிழமை கொழும்பில் ஆரம்பித்த வைக்கப்பட் டிருப்பதாக மேலக மக்கள் முன்னணி யைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் அகில இலங்கைக் கண்ண தாசன் மன்றத் தலைவருமான வேலணை வேணியன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தாய்க்கு உருவச் சிலை தமிழகத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் இதுவரை தமிழ்த் தாய்க்கு உருவச் சிலை நிறுவப் படவில்லை.

எதிர்வரும் 17 ஆம் திகதி கவியரசர் கண்ணதாசனின் 27 ஆவது நினைவுதினம் வருகின்றது. அன்றைய தினம் இலங்கையில் முதன் முதலாக தமிழ்த் தாய்க்கு உருவச்சிலை ஒன்று அழகுற அமைக்கப்பட்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு அன்பளிப்பு செய்யப்படும் என்று கடந்த ஜூன் 24 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற கவியரசர் கண்ண தாசனின் 81 ஆவது பிறந்ததின விழாவில் குறிப்பிட்டிருந்தேன்.

பிரபல சிற்பக் கலைஞரும் முன்னாள் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி ஆசிரியருமான உமாபதி சிவம் பாரதி இச்சிலையை வடிக்கிறார். இப்பணியை மேற்கொள்வதற்காக அவரை கௌரவித்து மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்.

இப்போது சிலை வடிக்கும் பணி கடந்த சனியன்று ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது. - என்றார் வேலணை வேணியன். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நவாலியூரைச் சேர்ந்தவரும் வேலணைப் பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பதிகாரியும் உள்ளூராட்சி உதவியாளருமான

## திரு.செ.ரமேஷ் (ச.நீ)

(77573)

*யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிஅபிவிருத்தி கற்கை நெறியில் விசேட சித்தி (Merit) பெற்றமையை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.*


இல.12, சந்தை ஒழுங்கை, மானிப்பாய். திரு.திருமதி.வை.செகராசசிங்கம் (ச.நீ) *(பசுமைப் புரட்சியாளர்).*

# பக்தி மாலை இசைத்தட்டு (சீ.டி) வெளியீட்டு விழா

*அளவெட்டி, கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விழாவில் (புதன்கிழமை 03.09.2008) மதியம் 12.30 மணியளவில்* **விஸ்வ பிரசன்னா** *(சந்திரன் குருக்கள் மகன்) அவர்கள் இயற்றி, இசையமைத்து, பாடிய கும்பழாவளைப் விநாயகர் பாடல்களும் சிவன் அம்பாள் முருகன் மீது பாடிய பாடல்களும் அடங்கிய இசைத்தட்டு (சீ.டி) வெளியிடுகின்றோம். அடியவர்கள், அன்பர்கள், சிவார்ச்சாரியர்கள், இதர ஆலய நிர்வாகத்தவர்கள் அனைவரையும் இந்த அழைப்பை ஏற்று நல் ஆதரவு தருமாறு வேண்டுகின்றோம்.*

**- அனைத்தும் ஆலயத் திருப்பணிக்கே -**

இ.விஸ்வேஸ்வரக்குருக்கள்.
(சந்திரன் ஐயா)



# மட்டுவில் தெற்கு வளர்மதி ச.ச.நிலைய ஆண்டு விழா

நாவற்குழி,செப்.2

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 43ஆவது ஆண்டு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது.

நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிராம அலுவலர் வே.துரைசிங்கம் கலந்துகொண்டார்.

ஆண்டுவிழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, பேச்சு மற்றும் விளையாட்டுப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

(202-288)

# தவறிவிட்டது

ஒரு தொகைப் பணம் (20,000) 31.08.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் சந்தியிலுள்ள **சோதி ஸ்ரோர்ஸ்** (பலசரக்குக் கடை)இல் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்

## இரத்தினம் இராசநாயகம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இ.இராசநாயகம் 29.08.2008 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணநாயகம், குழந்தை மற்றும் சரஸ்வதி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜெயவர்த்தனபுரத்தில் இன்று (02.09.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு - தொலைபேசி:* **011 2361461**


V.T.S. வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (77612)

*தகவல்:*
ரதிதேவி சத்தியலிங்கம்
*(ஒன்றுவிட்ட சகோதரி).*

# ஆறாத்துயரின் இரண்டாம் ஆண்டு நினைவுகளில்....!



அமரர் வல்லி சின்னராசா
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்)



அமரர் சின்னராசா இரத்தினசிங்கம்
(முன்னாள் முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம்)

| | தோற்றம் / மறைவு | |
|---|---|---|
| 14.07.1938 | தோற்றம் | 16.09.1971 |
| 26.08.2006 | மறைவு | 25.08.2006 |

திதி: திருதியை **02.09.2008** திதி: துதியை

அன்பும் பண்பும் அறிவும் தந்து பாசத்துடன் எமை வளர்த்த தந்தையே!
பல ஆண்டு காலம் பிள்ளைகளுடனும் பேரக்குழந்தைகளுடனும்
கொஞ்சிக் குலாவி அன்புடன் அரவணைத்த தெய்வமே
உங்கள் திருமுகத்தை நாம் எப்போது இனிக் காண்போம்!

ஆயிரம் உறவு இருந்தென்ன அண்ணனே;
யானைப் பலம் தன்னை நாம் இழந்து நிற்கையிலே...!
கண்களில் நீரொடு நெஞ்சினில் கனல் எரிய - உந்தன்
அன்பு முகம் காணாது தவியாய் தவிக்கின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ சிவகாமியின் தாள்தனைப் பணிகிறோம்!

*140/32A, தில்லையம்பதி,*
*கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்,*

குடும்பத்தினர்.


# MUSIC WORLD & COMPUTERS

**DVD WRITER**
Samsung 20x Sata - 3,400/=(1Year warr)
Samsung 22x Sata - 3,500/=(1Year warr)
Sony 20x Sata - 4,000/=(1Year warr)
Asus 20x LightScribe IDE - 3,900/=(1Year warr)
Asus 20x LightScribe Sata - 4,250/=(1Year warr)
HP 20x LightScribe IDE - 4,250/=(1Year warr)
Combo Samsung - 3,100/=(1Year warr)
CD Writer - 2,500/= (1Year warr)

**MOTHER BOARD**
ECS EliteGroup 945 DDR11 - 4,900/=(3Year warr)
GigaByte 945GCMS2S - 6,200/=(3Year warr)
Asus P5SD2(Via) - 5,500/=(3Year warr)
Asus P5GC MX1333 (intel)- 6,250/=(3Year warr)

**RAM**
Kingston DDR11 1GB - 2,400/=(2 Year warr)
Kingston DDR11 2GB - 4,900/=(2 Year warr)
Kingston DDR11 1GB KVR800-3,600/=(2 Year warr)
Kingston DDR11 512MB - 1,600/=(2 Year warr)
Kingston DDR1 1GB - 6,700/=(2 Year warr)
Kingston DDR1 512MB - 3,400/=(2 Year warr)
SD RAM 128MB - 1,000/=
SD RAM 256MB - 1,900/=

**LCD MONITOR**
15" LCD Monitor - 18,900/=(3 Year warr)
17" View Sonic LCD - 22,000/=(3 Year warr)
19" Multimedia ViewSonic - 30,000/=(3 Year warr)
19" Samsung LCD - 26,000/= (3 Year warr)

**SATA HARD DISK**
Samsung/Maxtor 80GB - 4,400/=(3 Year warr)
Samsung/Maxtor 160GB - 5,200/=(3 Year warr)
Samsung/Hitachi 250GB - 6,500/=(3 Year warr)

**IDE HARD DISK**
Hitachi 80GB - 5,500/=(3 Year warr)
Hitachi 160GB - 6,250/=(3 Year warr)
Hitachi 250GB - 7,250/=(3 Year warr)

**SCANNER**
Mustek 1248UP - 6,000/=(1Year warr)
HP G2410 - 8,900/=(1Year warr)
HP G3010 Negative-16,750/=(1Year warr)

**PRINTERS**
HP D1460 - 4,900/=
HP 1005 Laserjet - 14,500/=(1 Year warr)
HP 4355 Officejet 3in1-18,000/=(1 Year warr)
Samsung ML1640 Laserjet - 13,250/=(1Year warr)
Epson LQ300+11 - 20,900/=(1 Year warr)

**PEN DRIVE**
Kingston 1GB - 900/= (1 Year Warr)
Kingston 2GB - 1200/= (1 Year Warr)
Kingston 4GB - 2100/= (1 Year Warr)
Kingston 8GB - 4200/= (1 Year Warr)

**TONER**
HP 12A Original - 4,900/=
HP 49A Original - 4,900/=
HP 13A Original - 5,000/=
HP 15A Original - 5,000/=
Samsung ML2010 - 7,600/=

**WOOFERS**
Logitech 2.1ch - 3,500/=
MicroLap 5.1ch - 7,700/=
Creative 5.1ch - 8,400/=
Creative 5.1 Inspire - 11,000/=
Creative 7.1 Inspire - 21,000/=

**ACCESSORIES**
Web Cam - 1,500/=
External TV Card - 3,500/=
LCD TV Card - 4,900/=
Power Supply - 1,750/=
Sata/IDE Power Cable - 2,500/=
Lap Top Multicharger - 3,600/=

MINI NOTE BOOK (LAP TOP)
74,000/=

THIS OFFER FOR 1 WEEK

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# ஆட்கள் காணாமல் போதலில் இலங்கையே முன்னணி நிலை

ஆள்கள் பலவந்தமாகக் கடத்திக் காணாமற்போகச் செய்யப்படும் கொடூரம் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றது.

இலங்கை, பாகிஸ்தான், சாட், பிலிப்பீன்ஸ், சூடான், தாய்லாந்து போன்ற நாடுகளிலேயே பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

இருபத்தியைந்தாவது வருடமாக 'சர்வதேச காணாமற்போனோர்' தினம் கடந்த சனியன்று அனுஷ்டிக் கப்பட்டது. அதனை முன்னிட்டு - 'பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாகக் காணாமற்போகச் செய்யப்படுவோர் தொடர்பான ஐ.நா.அமைப்பு' - வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேசமயம், இலங்கையில் பலவந்தமாக ஆள்கள் கடத்தப்பட்டு காணாமற் போகச் செய்யப்படுவது அதிகரித்திருக்கின்றமை இலங்கையின் பொலிஸ் திணைக்களப் புள்ளிவிவரங்களில் இருந்தும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2006 இல் நாட்டில் 1,190 பேர் கடத்தப்பட்டிருந்தனர்.

இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் 1,229 ஆக உயர்ந்தது.

இப்போது, இந்த வருடத்தின் - முதல் எட்டுமாத காலத்திலேயே - இந்த எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

ஆள்கள் பலவந்தமாகக் கடத்தப்படுவதும், காணாமற்போகச் செய்யப்படுவதும் யாழ். குடாநாட்டில்தான் மிக மிக அதிகம்.

2007 இல் மட்டும் அங்கு 118 பேர் கடத்தப்பட்டமை பற்றிய முறைப்பாடுகள் பொலிஸ் திணைக்களத்துக்குச் செய்யப்பட்டிருக்கின்றன.

இது தவிர, பொலிஸுக்கு முறைப்பாடு செய்யப்படாத பல சம்பவங்களும் அங்கு அநேகம் உள்ளன.

வெளியிடங்களுக்கான தரைவழிப்பாதை எல்லாம் துண்டிக்கப்பட்டு முப்படை மற்றும் பொலிஸாரின் முற்றுகைக்குள் சிக்கியிருக்கும் யாழ். குடாநாடு ஒரு வகையில் திறந்தவெளிச் சிறைச்சாலை. பொலிஸாரும் முப்படையினரும் என சுமார் ஐம்பதாயிரம் பாதுகாப்புத் துருப்புகள் சிறிய குடாநாட்டுப் பிரதேசம் எங்கும் குவிக்கப்பட்டுள்ளன. சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள், தடை நிலைகள், காவலரண்கள். போதாக்குறைக்கு இரவு நேர ஊரடங்கு மற்றும் திடீர் சோதனைகள், சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் என ஏகப் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

இவற்றுக்கு மத்தியில்தான் சர்வ சாதாரணமாக ஆள்கள் கடத்தப்படுதலும், காணாமற்போதலும் அரங்கேறுகின்றன.

இவ்வளவு கெடுபிடிக்குள்ளும், கட்டுப்பாட்டுக்குள்ளும், தான் வைத்திருக்கும் யாழ். குடாநாட்டில், மர்மமான முறையில் அவ்வப்போது இடம்பெறும் படுகொலைகள் மற்றும் ஆள்கடத்தல்களுக்கும் தனக்கும் தொடர்பு ஏதுமில்லை என்று கூறி அரசுத்தரப்பு இவ் விடயத்தில் தனது கையை விரித்து சுலபமாகத் தப்பிவிட முடியாது; பொறுப்பிலிருந்து விலகிவிட முடியாது.

குடாநாட்டில் மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளிலும்அரச உயர்பீடம் மற்றும் பாதுகாப்புத் தலைமை ஆகியவற்றின் ஆசி, மறைமுக அங்கீகாரம், மௌனமான இணக்கம் ஆகியவற்றுடன் அரங்கேற்றப்படுபவையே இந்தக் கொடுமை என்பதும் இன்று சர்வதேசம் அறிந்த பரம இரகசியமாகும்.

பல்வேறு தேசங்களிலும் இத்தகைய இரும்புத் திரைகளுக்குப் பின்னால் நின்றபடி அதிகாரத்தின் அரூபக்கரங்கள் புரியும் 'திருவிளையாடல்கள்' எல் லாம் இப்போது பகிரங்கமாகி வருகின்றமை இன்று கண்கூடாகின்றது.


இத்தகைய அரச பயங்கரவாதங்களுக்குப் பொறுப்பான அரசுத் தலைவர்களும், படை அதிகாரிகளும், காலம் கடந்தும் கூட, சர்வதேச சட்டங்களின் பிடியினின்றும் தப்பிவிட முடியாது என்ற யதார்த்தம் இப் போது செயலுருவில் மெய்மைப்படுத்தப்பட்டு வருகின்றமையையும் காண்கின்றோம்.

'புலிப் பயங்கரவாதிகளை அழிக்கும் நடவடிக்கை' என்ற பெயரால் அரங்கேற்றப்படும் இந்த அராஜகத்தின் விளைவாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றின் முன்னால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும் நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

சட்டரீதியான - இறைமையுள்ள - அரசு என்று தனக்குத் தானே மகுடம் சூட்டிக்கொள்ளும் கொழும்பு ஆட்சிப்பீடம், இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு அனுமதித்து, இடமளித்து - ஒரு வகையில் அதற்கு ஊக்கமும், உற்சாகமும் வழங்கி - வருவதன் மூலம் சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கி நிற்கின்றது. ஜனநாயக ரீதியில் தெரிவான அரசின் பெயரால் அரங்கேறும் இந்த அராஜ கங்கள், சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியையே தட் டும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளன.

இவற்றின் விளைவுகள் கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கு சர்வதேச ரீதியில் ஆப்பாக இறங்கும் காலம் தூரத்தில் இல்லை எனலாம்.

# ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் கொடியேறியது



யாழ்ப்பாணம் செப்.2

தெல்லிப்பழை துர்காதேவி ஆலய பெருந்திருவிழா நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷம் ஒலிக்க, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஆலயத்தில் ஒன்றுகூடி அம்பாளைத் தரிசித்தனர்.

அடியார்களில் பெருமளவானோர் அடியழித்தும் பிரதிஷ்டை செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

ஆலயத்திருவிழா தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 10ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்குச் சப்பறத் திருவிழாவும், 11ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 12ஆம் திகதி ஆவணி ஓணத் தன்று காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். ஆலயத்திற்கு வருகை தரும் பெண்களும் குழந் தைகளும் நகைகள் அணிந்து வருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண் டும் என்றும் இரவு நேரங்களில் ஆலயச் சூழலில் தங்குவது தவிர்க்கப்படவேண்டும் எனவும் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (203)

# இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திக்க நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இந்தியாவுக்கு

கொழும்பு,செப்.2

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இந்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் சம்பந்தன் சென்னையிலும் புதுடில்லியிலும் பல கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கான நாள் தீர்மானிக்கப்படும் எனவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னரே சந்திப்பு நடைபெறலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இணைப்பாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கடந்த சனிக்கிழமை இந்தியா சென்றுள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங்குடனான சந்திப்பில் சம்பந்தனுடன் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற குழுப் பிரதித் தலைவர் மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொள்வார் எனக் கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வந்திருந்த பிரதமர் மன்மோகன்சிங்கைக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு சந்தித்துக் கலந்துரையாடியபோது புதுடில்லிக்கு வருமாறு அவர் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (203)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.2

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளின் வரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'அன்றும்... இன்றும்... என்றும்....' என்னும் தலைப்பில் அதிபர் க.ஆனந்தராசா இசைச்சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (203)

# சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம், செப்.2

காரைநகர் வலந்தலை இலகடி அத்திபுரக் கந்தசுவாமி ஆலய அலங்காரத் திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது. (203)

* * *

சுழிபுரம் செப்.02

சுழிபுரம் வடக்கு சம்புநாதன் சிவன் ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை தொடக்கம் மாலை வரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவர்.

தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.02

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய சங்காபிஷேமும் மணவாளக் கோலமும் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

காலை 7 மணிக்குக் காலைப் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும். மாலை 3 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 5.30 மணிக்கு சுவாமி வீதியுலா வருவார். (203)

* * *

யாழ்ப்பாணம், செப்02

வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் ஆலயத் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. (203)

* * *

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது. (203)

* * *

புத்தூர் விசாலாட்சி அம்பாள் ஆலயக் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.20 மணி தொடக்கம் 11.04 வரையுள்ள சுப நேரத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (203)



மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதியாகப் பதவியேற்ற அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்கின்றார். அருகில் யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் காணப்படுகிறார்.

# மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதியாக ஏ.ஏ.ஆனந்தராஜா நேற்றுப் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,செப்.2

மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதியாக அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா நேற்றுத் திங்கட்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வைபவத்தில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அவர் நீதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த வைபவத்தில் யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா மற்றும் சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

1980ஆம் ஆண்டில் பிறந்த அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா அளவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயின்ற இவர் 2002ஆம் ஆண்டில் கொழும்பு சட்டக் கல்லூரிக்கு அனுமதி பெற்றார். 2005ஆம் தனது சட்டக் கல்வியை நிறைவுசெய்த அவர் 2006ஆம் ஆண்டு ஜனவரியில் வவுனியா நீதிமன்றத்தில் அரச சட்டவாதியாக நியமனம் பெற்றார். பின்னர் திருகோணமலை நீதிமன்றத்திலும் அரச சட்டவாதியாகக் கடமையாற்றிய இவர் அதன்பின் யாழ்.மேல் நீதிமன்றத்துக்கு அரச சட்டவாதியாக நியமிக்கப்பட்டார். கடந்த மூன்று வருடங்களாக இங்கு பணியாற்றிய அவர் தற்போது மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார். அவர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்துக்குச் சென்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 18 | 03.09.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ. 02.07வரை |
| நட்சத்திரம் : | சித்திரை |
| | பி.இ. 04.44 வரை |
| ஆவணி சதுர்த்தி விரதம் | |
| சுபநேரம் : | 04.35 - 06.05 |
| ராகுகாலம் : | 12.05 - 01.35 |

# இந்தியக் கடலோரப் பொலிஸாரால் இலங்கை மீனவர் பதினொரு பேர் கைது

கொழும்பு,செப்.02

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே எல்லை தாண்டி உட்பிரவேசித்த 11 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாகப்பட்டினம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஹேவான்,பெர்னாண்டோ,ஜட்மில் ராய்,பெரேரா,மக்சில் பெர்னாண்டோ, ரஞ்சித் பெரேரா, கல்ரிகன், கந்திலால், லால் பெர்னாண்டோ,பேபி ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

நேற்றுமுன்தினம் இவர்கள் விசாகப் பட்டினம் துறைமுக பொலிஸாரிடம் கடலோர பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டதையடுத்துபொலிஸார் அவர்களை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். எதிர்பாராத விதமாக இந்திய கடல் எல்லைக்குள் இவர்கள் நுழைந்துள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில்.........



பருத்தித்துறை, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இலங்கை வங்கியின், பொன் அரும்புகள் மன்ற அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் அலுவலகத்தைத் திறந்து வைப்பதையும் அருகில் வித்தியாலய அதிபர் கே. யோகநாதன் நிற்பதையும்



ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இலங்கை) வாடிக்கையாளர் தெ.மகேஸ்வரன் அகால மரணமானதை அடுத்துகாப்புறுதித் தொகையான 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

காசோலையை மரணமானவரின் மனைவி திருமதி ம.சுபாசினியிடம் நிறுவனத்தின் யாழ். கிளை முகாமையாளர் வி.வி.சர்மா கையளிப்பதையும் அருகில் யாழ்.கிளை பிரதம சந்தைப் படுத்தல் அதிகாரி கோபிதாசன், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் பிரதீப் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இலங்கை வங்கியின் வங்கிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட புலோலி மேற்கு தம்பசிட்டி கிராம அறிமுக விழாவை பிரதம விருந்தினரான இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எம்.ஏ.அருமைநாயகம் மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்கிறார். விழாத் தலைவர் வர்த்தகர் கே.தங்கராஜாவும் காணப்படுகிறார்.

(படம்:-அருணா)



தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக் கிளையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குதூகல சேமிப்புக் கணக்கு ஆரம்ப விழாவிலே முதலாவது கணக்கை ஆரம்பித்த பெண்மணிக்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் கணக்குப் புத்தகத்தைக் கையளிக்கின்றார். கிளை முகாமையாளர் எம்.பரமானந்தன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (218)



குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் நூலகத்தை மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை புனரமைத்துக் கொடுத்துள்ளது.

புனரமைக்கப்பட்ட நூலகத்தை மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா நாடா வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

வித்தியாலய அதிபர் எஸ்.சந்திரகுமார், சுன்னாகம் கிளை முகாமையாளர் மா.சந்திரகாந்தனுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்பதையும் அருகில் உதவிப் பொது முகாமையாளர் மற்றும் வங்கி அலுவலர் நிற்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம்.

# முட்டை, இறைச்சி விலை உயர்வு

குருநகர்,செப்.02

யாழ்ப்பாணத்தில் புறொயிலர் கோழி மற்றும் கோழி முட்டையின் விலை உயர்வடைந்துள்ளது.

இதுவரை நாள்களாக 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ புறொயிலர் இறைச்சி தற்போது 540 ஆக உயர்வடைந்துள்ளது.இதே நேரத்தில் 11 ரூபா தொடக்கம் 13 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த கோழி முட்டை ஒன்று தற்போது 15 ரூபாவாக உயர் வடைந்துள்ளது.

## செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்.வலய முன்பள்ளி ஆசிரியர்கள், தரம் 1 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோருக்கு இன்று யாழ். இந்து மகளிர்கல்லூரியில் நடைபெறவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர்திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203)

## தவறிவிட்டது

இரத்தினம் ரகுநாதன், 167, மானிப்பாய் வீதி ஓட்டுமடம், யாழ்ப்பாணம் என்னும் பெயரும் விலாசமும் உடைய தேசிய அடையாள அட்டை (833212354V) விசேட அடையாள அட்டை அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் கடந்த 26.08.2008 அன்று வண்ணார் பண்ணைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஓட்டுமடச் சந்தி இரத்தினம் கடையில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்

## திருமதி தியாகலிங்கம் தவமணி

### (தங்கவேலு பாமஸி உரிமையாளரின் மனைவி)



காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகலிங்கம் தவமணி (01.09.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு கந்தையா (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)- காலஞ்சென்ற கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தங்கவேல் (முன்னாள் பிரபலவர்த்தகர் அநுராதபுரம், இந்தியா பிரபல கொன்ரக்ரர்) தங்கவேலு இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கவேல் தியாகலிங்கம் (தங்கவேல் அரிசி ஆலை, அநுராதபுரம், வவுனியா தங்கவேல் பாமஸி உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார் (தங்கவேல் பாமஸி) காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மற்றும் தனுசியா அவர்களின் பாசமிகு மாமியாரும் செந்தூரன்அவர்களின் பாசமிகு பேர்த் தியாரும் காலஞ்சென்ற Dr.கனகரட்ணம், நடராசா மற்றும் சிவநேசம்(ஓய்வுபெற்ற பிரதிப் பணிப்பாளர், திட்டமிடல் அமைச்சு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சத்தியதேவன் மற்றும் ஜெகசோதி, கெங்காதரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (02.09.2008) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, தாளையடி லேன்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

தகவல்:
த. தியாகலிங்கம்
(கணவர்).

# மரண அறிவித்தல்

## நடராஜா பத்மநாதன்

### (வழக்கறிஞர்)

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு தெஹிவளையில் வசித்து வந்தவருமாகிய நடராஜா பத்மநாதன் 31.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ் சென்றவர்களான முடிக்குரிய வழக்கறிஞர் நடராசா- காந்திமதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற அநுராதபுரம் முடிக்குரிய வழக்கறிஞர் சம்பந்தரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-சுந்தரலக்ஷ்மி தம்பதியரின் மருமகனும், விமலோதயாவின் கணவரும், கிரிதரன்( பொறியியலாளர், தலைவர் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூ.ச. சமாசம், தலைவர் யாழ். ப.நோ.கூ.ச), Dr.ராகவன் (ஆஸ்திரேலியா), Dr.காயத்திரி(பஞ்சாப் சர்வகலாசாலை- சண்டிகார்), சுபாஷினி (பணிப்பாளர்- விமலோதயா சாஸ்திரிய பரத நாட்டிய கேந்திரா, இந்திய கலாசார நிலையம்), பார்த்தீபன் (பொறியிய லாளர் USA), கேசவன்(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகாதேவா மற்றும் சத்தியபாமா, சகுந்தலா, ராதா, காலஞ்சென்ற வாமதேவா (முன்னாள் தலைவர் -புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை) மற்றும் விமலா ஆகியோரின் சகோதரரும், நளாயினியின் மாமனாரும், கிரிஜா, பிரணவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.09.2008) செவ்வாய் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரைக்கும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 2.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ பிருந்தாவனம்
37, [illegible]
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
ப.கிரிதரன்
(மகன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈராக்கின் பிரதான மாகாணமான அன்பாரை அமெரிக்கப் படை அரசிடம் கையளிக்கிறது

பக்தாத், செப்.02

ஈராக்கில் இதுவரை தனதுகட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த அன்பார் மாகாணத்தை அமெரிக்கப்படை, ஈராக்கிய அரசிடம் ஒப்படைக்க முன்வந்துள்ளது. தற்போது இதற்கான ஏற்பாடுகளை இப்படை மேற்கொண்டுள்ளது. ஈராக்கிலேயே குரூர கொலைகளும், குண்டுத் தாக்குதல்களும் பரவலாக நாளாந்தம் இடம் பெற்றுவந்த ஒரு மாகாணம் இதுவாகும்.

சுனி தீவிரவாதப் போராளிகளின் பலம் மிக்க கோட்டையாகத் திகழ்ந்த அன்பார் மாகாணத்திலேயே பெருந்தொகையான கூட்டுப்படைத் துருப்புகள் பலியாகியுள்ளன. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், கார்க் குண்டுத்தாக்குதல்கள், வீதியோரக் குண்டுத் தாக்குதல்கள் ஆகியவற்றால் இம் மாகாணம் முழு ஈராக் கையுமே உலுக்கி வந்துள்ளது.

அல்-குவைதாவின் வழிநடத்தலில் இத் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில், படை வீரர்களை விட ஈராக்கிய் சிவிலியன்களே பெருமளவில் பலியாகியுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோனோர் பெண்களும், பிள்ளைகளுமாவர். 2006 ஆம் வருட பிற்பகுதியில், தீவிரவாதிகளில் எண்பது சதவிகிதத்தினர் அல்- குவைதாவுக்கு எதிராகத் திரும்பியதோடு, அரசியல் நீரோட்டத்தில் சங்கமிக்கவும் ஆரம்பித்தார்கள்.

இன்று அன்பார் மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள விழிப்புக்குழுக்களில் முன்னைய தீவிரவாதப் போராளிகளே இடம் பெற்றுள்ளார்கள். இக்குழுக்கள், அன்பார் மாகாணத்தில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை மீள நிலைநாட்டுவதற்கும், சிவிலியன்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும், படைகளோடு இணைந்து செயற்பட்டு வருகின்றன.

ஈராக்கிலுள்ள 18 மாகாணங்களில் ஏற்கனவே, தமது கட்டுப்பாட்டுக்குளிருந்த 10 மாகாணங்களை அமெரிக்கத் துருப்புகள் ஈராக்கிய படைகளிடம் ஒப்படைத்துள்ளன. தற்போது 11 ஆவது மாகாணமாக அன்பார் ஈராக்கியப் படைகளிடம் ஒப்படைக்கப் படவுள்ளது.

## பெண்கள் கிரிக்கெட்: இங்கிலாந்து அபாரம்

இங்கிலாந்து அணியுடனான முதல் ஒரு நாள் போட்டியில், இந்திய மகளிர் அணி 8 விக்கெட்க்கள் வித்தியாசத்தில் தோற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. பாத் கிரிக்கெட் கிளப் மைதானத்தில் நடந்த முதல் போட்டியில், நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 43.4ஓவரில் 124 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது. தலைவர் மித்தாலி ராஜ் அதிகபட்சமாக 44 ஓட்டங்கள் எடுத்தார். நான்கு வீராங்கனைகள் ஓட்டம் ஏதும் எடுக்காமல் டக் அவுட் ஆகி ஏமாற்றினர்.

களமிறங்கிய இங்கிலாந்து அணி 36 ஓவரில் 2 விக்கெட்க்கள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் பெற்று வென்றது. 2 ஆவது ஒருநாள் போட்டி டான்டன் நகரில் நேற்றிரவு நடக்கவிருந்தது.

# ஒரிசாவில் மீண்டும்வன்முறைகள் வெடித்தன; கலவரப் பகுதிகளில்இராணுவம் குவிப்பு!

புவனேஸ்வர், செப். 2

ஒரிசா மாநிலம், கோரபுட் மாவட்டத் தில் கலவரம் பரவி வருவதையடுத்து அங்கு கூடுதலான துணை இராணுவப் படையை அனுப்புமாறு மத்திய அரசிடம் மாநில அரசு கோரியுள்ளது. இதையடுத்து அங்கு துணை இராணு வப் படையினர், சிறப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஒரிசா மாநிலம், கந்தமால் மாவட்டத்திலுள்ள தும்முடிபந்த் என்ற இடத்தில், விஸ்வ இந்து பரிஷத் தலைவர் லட்சும ணானந்தா உட்பட ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலை எதிரொலியாக தேவாலயங்கள் மற்றும் குறிப்பிட்ட சமூகத்தினரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதையடுத்து, அங்கு கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கடந்த சனி யன்று அங்கு அசம்பாவிதச் சம்பவங்கள் எதுவும் இல்லை. நேற்றுமுன்தினம் இயல்பு நிலை திரும்பியது.

இதனிடையே, கந்தமால் மாவட்டத்தில் அருகேயுள்ள கோரபுட் மாவட்டத் திற்கு கலவரம் பரவியுள்ளது. ஜேப்பூர் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் கோஷ் டிகளுக்கிடையே கடும் சண்டை நடந் தது. இதில் 11 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சண்டையை அடுத்து அங்கு துணை இராணுவப் படையினர், சிறப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பைபா ரிகுடா என்ற இடத்தில் தேவாலயங்கள் சேதப்படுத்தப்பட்டன. கோரபுட்டில் கலவரம் பரவிவருவதையடுத்து முன்னெச் சரிக்கை நடவடிக்கையாகக் கூடுதலாக, துணை இராணுவப் படையை அனுப் புமாறு மத்திய அரசிடம் மாநில அரசு கோரியுள்ளது.

# பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் சர்தாரிக்கு தீவிரவாத ஜாமியா ஆதரவு

இஸ்லாமாபாத், செப்.02

பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் ஆளுங்கூட்டணி சார்பில் போட்டியிடும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத்தலைவர் சர்தாரிக்கு, இஸ்லாமிய தீவிரவாதக் கட்சியான ஜாமியா உலோமாவின் ஆதரவு கிட்டியுள்ளது. இக்கட்சியின் நான்கு நிபந்தனைகளையும் ஆளுங்கூட்டமைப்பு அரசு ஏற்றுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி நிகழும் இந்த ஜனாதிபதித் தேர்தலில், மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

ஆளுங்கூட்டணி சார்பில், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத்தலைவர் சர்தாரியும், நவாஸ் ஷரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியின் சார்பில் முன்னாள் பிரதம நீதிபதி சித்திக்கும், முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு ஆதரவான முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில், ஹுசைன் சயீத்தும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில், நடாளுமன்ற உறுப்பினர்களும், மாநில சட்ட சபை உறுப்பினர்களுமே வாக்களிப்பார்கள். இவர்களின் மொத்த எண்ணிக்கை, 1170 ஆகும். பொது மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் 342 உறுப்பினர்களும், செனட் சபையில் 100 உறுப்பினர்களும் உள்ளார்கள். பஞ்சாப் மாநில சட்டசபையில் 371 உறுப்பினர்களும், சிந்து மாநில சட்ட சபையில், 168 உறுப்பினர்களும், வட மேற்கு எல்லைப்புற மாநில சட்ட சபையில் 124 உறுப்பினர்களும், பலுச்சிஸ்தான் மாநிலத்தில் 65 உறுப்பினர்களுமுள்ளார்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சமாசத்தின் தலைவர்
ப.கிரிதரன் (பொறியியலாளர்)
அவர்களின் பாசமிகு தந்தை

**நடராசா பத்மநாதன் (சட்டத்தரணி)**

அவர்களது பிரிவுத்துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/554340)

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கனரட்ணம் நர்மதன் (மதன்)

கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் நர்மதன் (31.08.2008) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கனகரட்ணம் - செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சிவராயினியின் அன்புக் கணவரும், தேவபாலன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரிசானாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2008) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*
(77636)
தகவல்:
குடும்பத்தினர்.

### நித்தியானந்தன் துஷியந்தன்



(பழைய மாணவன், யா/இ.கல்லூரி, A/L 2001, மலேசியப் பல்கலைக்கழகம்)

பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தன் துஷியந்தன் (31.08.2008) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் வரதலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வனும், சுதர்சினியின் (பழைய மாணவி, வேம்படி மகளிர் பாடசாலைA/L2004) அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - காமாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - கமலாதேவி தம்பதியினரின் அன்புப் பேரனும் திருச்செல்வம், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், சிறீகாந்தன்,கயிலைநாதன் ஆகியோரின் பெறாமகனும் அருந்ததிநாயகி, விமலாதேவி, கமலாதேவி, வரதராஜா (பாபு), காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*120, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(77638)
தகவல்:
தாய்.

## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்

## வேலைக்கான கேள்வி அறிவித்தல்-2008

கீழ்குறிப்பிட்டுள்ள வேலைக்கு நிர்மாண நிறுவனத்தின் (ICTAD) பதிவுள்ள ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்வி கோரப்படுகின்றது.

1.கேள்விப்பத்திரங்கள் 10/09/2008 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.
2.கேள்விப்பத்திரங்கள் 12/09/2008 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
3.கேள்விகள் யாவும் 12/09/2008 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4.பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயருடன் அந்த வேலைக்கான கேள்வி என எழுதி செயலாளர், காரைநகர் பிரதேச சபை, காரைநகர் எனவும் அதன் பிரதியை பிரா./உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரா./உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் முகவரியிட்டும், பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.
5.மேலதிக விவரங்களை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

| இல | வேலைவிவரம் | பதிவுத் தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்விப் படிவ வைப்பு பணம் | வற் வரி |
|---|---|---|---|---|---|
| 01 | காரைநகர் பிரதேச சபை தலைமை அலுவலகம் அமைத்தல் | M8 | 18000.00 | 2000.00 | 300.00 |

*காரைநகர் பிரதேச சபை,*
*காரைநகர்.*
*01.09.2008*

(சி/554342)

இரா.லோகநாதன்
செயலாளர்
பிரதேச சபை, காரைநகர்.

## BOC

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 30.11.2007 ற்கு முன்னர் 6மாதங்களுக்கும் 31.05.2007ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக் கிளை | யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2008 செப்ரம்பர் 6ம்(சனி) 7ம் (ஞாயிறு) திகதிகளில் காலை 9.30 மணிக்கு |
| யாழ்.2ம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் (அச்சுவேலி விரிவாக்கற்கிளை உட்பட) | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (வேலணை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

*உதவிப் பொது முகாமையாளர்,*
*இலங்கை வங்கி வடபிராந்தியம்,*
*உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல: 021 222 3126*
*021 222 2735*

(சி/554343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# விகாரையிலிருந்து இரவு ஒலிபெருக்கியில் மத போதனை: பிக்குவைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைக்க உத்தரவு!

## மற்றும் மூவருக்கும் விளக்கமறியல்; உயர்நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு, செப். 02

இரவில் சத்தம் எழுப்புவது தொடர்பாக உயர்நீதிமன்றம் விதித்துள்ள கட்டுப்பாட்டையும் மீறி, ஒலி மாசடைதலை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு ஆஜர் செய்யப்பட்ட மூவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட உயர்நீதிமன்றம், மற்றொரு பிக்கு ஒருவரையும் கைது செய்து விளக்கமறியலில் வைக்கவும் பணித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, நிமால் காமினி அமரதுங்க ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவுகளை நேற்று விடுத்தது.

காலி ஹிக்கடுவைப் பகுதியில் 'கிளப்' ஒன்றில் இரவில் தொடர்ந்து சத்தமாக இசை ஒலி எழுப்பி சூழல் மாசடையச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் மகேஷ்குமார், ஐ. குணதிலக, எல்.பி.டி.மயூர சமல் ஆகியோர் நேற்று உயர்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டது.

இதேபோன்று வெலிக்கடைப் பொலிஸார் வெலிக்கடவத்த பௌத்த விகாரையில் இருந்து இரவில் மத நிகழ்வுகளை ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பி, ஒலி மாசடைதல் நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் வண.பன்னல பஞ்சாரத்ன தேரர் என்ற பிக்குவைக் கைது செய்து நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தனர்.

ஒலி மாசடைவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உத்தரவுகளை உயர்நீதிமன்றமே விடுத்திருப்பதால் அவரை நேற்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே அவரை விடுவித்திருந்தது.

ஆனால் அவர் நேற்று உயர்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதனால் அவரையும் உடன் கைது செய்து, அவரையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்து, அதன்பின்னர் உயர்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (அ-சி)

### கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது என்றும் துறைமுகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் சிறு சேதங்களே ஏற்பட்டுள்ளன என்றும் தீ உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் கொழும்புத் துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### மல்லாவியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னரங்குகளைக் கைப்பற்றினர் எனவும் இராணுவம் கேந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மல்லாவியைக் கைப்பற்றும் நிலை யில் உள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை அங்கு இராணுவத்தினர் எதிர்நோக்கியுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெள்ளாங்குளம் - மாங்குளம் வீதியில், மன்னார் பூநகரி வீதியை இணைக்கும் மல்லாவி விடுதலைப் புலிகளுக்கு தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. விடுதலைப் புலிகள் இப்பகுதியைத் தமது நிர்வாக, விநியோக மற்றும் உறுப்பினர்களைத் தங்கவைக்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர் - எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மல்லாவிக்குள் நுழையும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் கடுமையான ஆட்டிலறிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை வன்னேரிக்குளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 16 பேர் கடுமையாகக் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

### நாச்சிக்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின - என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல்கள் வெற்றிகரமாக நடத்தப் பட்டன என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (அ-சி)

### புறக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனையவர்கள் எதிர்வரும் சில தினங்களில் கைது செய்யப்படலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலைய தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### அரச கட்டுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக [illegible]களுக்குள் வருகின்றனர் என்பதனால் [illegible]த மக்களை பாதுகாக்க வேண்டியதும் [illegible]வையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதும் எமது கடப்பாடாகும்.

புலிகளின் பிடியிலிருந்து விட்டு விலகி சிவில் நிர்வாக பிரதேசங்களுக்கு வரும் வடபகுதியைச் சேர்ந்த மக்களை பாதுகாப்பதற்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல கட்சிகளின் பொறுப்பாகும். அவ்வாறு வரும் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுப்பது மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் முறையாக முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பயங்கரவாதிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை படையினர் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற நிலையில் அங்கிருந்து சிவில் நிர்வாக பிரதேசங்களுக்கு வருகின்ற மக்களின் நலன்புரி விடயங்களில் [illegible] கவனம் செலுத்த வேண்டும். அதன் [illegible]மாகவே அம்மக்களின் விசுவாசத்தை வென்றெடுக்க முடியும்.

வடக்கில் மக்கள் துன்பப்படுவதாக சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச சமூகத்தின் அவ்வாறான தலையீடுகளை தடுப்பதற்கு சகல கட்சிகளின் உறுப்பினர்கள் குழுவை நியமித்து அம்மக்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "காஸ்" விலை நவம்பரில் குறையுமாம் வர்த்தக, நுகர்வோர் அமைச்சர் சொல்கிறார்

சமையல் எரியாயுவின் (காஸ்) விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி இதன் விலை குறைக்கப்படும் என்று வர்த்தக நுகர்வோர் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுக் கூறினார்.

வர்த்தக நுகர்வோர் அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில் ஏன் சமையல் எரிவாயுவின் விலை மாத்திரம் இலங்கையில் அதிகரிக்கப்படுகிறது என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் தாம் இந்த எரிவாயுவை உலக சந்தையில் கொள்வனவு செய்தோம். அப்போது உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்தது.

ஆகவேதான், எம்மால் இதன் விலையை அதிகரிக்க வேண்டியேற்பட்டது. இருப்பினும், மக்களுக்கு அதிக சுமையை ஏற்றாமல் நியாயமாகத்தான் இந்த விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தற்போது உலகச் சந்தையில் எரிவாயுவின் விலை குறைந்திருப்பதால் நவம்பர் மாதம் முதலாம் திகதி நிச்சயம் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்படும் - என்றார்.

### முக்கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களைப் புதுடில்லிக்கு அழைத்துப் பேசுவது தொடர்பாக அவர்களுக்கு வழங்கப்படும் அதே சம அந்தஸ்து நிலையை ஆனந்தசங்கரி, சித்தார்த்தன், ஸ்ரீதரன் ஆகியோரைக் கொண்ட முக்கூட்டணிக்கும் வழங்க புதுடில்லி வட்டாரங்கள் தீர்மானித் திருந்ததாகக் கூறப்படுகின்றது.

• இதன் படி -

புதுடில்லியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சந்திக்கும் - பிரதமர் மன்மோகன் சிங் உட்பட அனைத்துத் தலைவர்களையும் - முக்கூட்டு அணிப் பிரமுகர்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்படும் என புதுடில்லி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(9 ஆம் பக்கமும் பார்க்கவும்)

### வன்னி மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை இப்போது தீவிரமடைந் துள்ளது. கிளிநொச்சிக்குள் படையினர் இப் போது நுழைந்துவிட்டனர்.

இந்த படை நடவடிக்கையின்போது பொது மக்கள் எவருக்கும் எந்தவித ஆபத்தும் ஏற் படக்கூடாது என்பதில் அரசு மிகக் கவ னமாக உள்ளது.

கிளிநொச்சி மக்களை வவுனியாவில் தற்காலிகமாகத் தங்க வைக்கஏற்பாடு

இதற்காகவே கிளிநொச்சி மக்களை வவுனியாவில் தற்காலிகமாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துள்ளோம்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு மக்கள் வருவதற்கு இலகுவான பாதை ஒன்று உள்ளது. அந்தப் பாதையின் ஊடாகவே நாம் அந்த மக்களை வவுனியாவுக்கு வரவழைப்போம்.

அது எந்தப் பாதை, அந்த மக்கள் எப்போது வரவேண்டும் போன்ற விவரங்களை நாம் இப்போது வெளியிடமாட்டோம். அப்படி வெளியிட்டால் புலிகள் உஷாராகி மக்களை வரவிடாமல் தடுத்துவிடுவர். அவர்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி யுத்தம் செய்வர்.

ஆகவேதான், உரிய நேரம் வரும்போது நாம் அந்த விவரங்களை மக்களுக்கு அறிவிப்போம்.

தற்போது கிளிநொச்சியில் யுத்தம் நடைபெறுகின்றபோதிலும் அங்கு உணவுத் தட்டுப்பாடோ அல்லது மருந்து தட்டுப்பாடோ கிடையாது.

அங்கு இவை தாராளமாக கையிருப்பில் உள்ளன என்று அங்குள்ள அதிகாரிகளே உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு நாளும் அங்கு உணவுப் பொருள்களும் மருந்துபொருள்களும் அனுப்பப்பட்ட வண்ணமே உள்ளன.

இவற்றுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது என்று புலிகளுக்கு ஆதரவானவர்கள்தான் கூறுகின்றனர். இதை நாம் முற்றாக மறுக்கிறோம் - என்றார். (அ-சி)

# புனித ரமழான் இன்று ஆரம்பம்

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதம் இன்று ஆரம்பமாகின்றது.

கொழும்பு, பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற ரமழான் தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாட்டில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கொழும்பு, பெரியபள்ளிவாசல் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற தலைப் பிறையைத் தீர்மானிக்கும் மாநாட்டில் உலமாக்கள், ஹத்தீப் மார்கள் அகில இலங்கை ஜம்மியத்துல் உலாமாப் பிரதிநிதிகள், முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### வன்னியில் பருவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெயர்ந்த மக்களை இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாப் பிரதேசத்திற்குள் வருமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்ற போதிலும், அந்த அழைப்[illegible] ஏற்று எவரும் வவுனியா அல்லது மன்னா[illegible] இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்ததாகத் தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (அ-1)

### ஆசிரியர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதமடைந்துள்ளது.

இதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் ஒரு மாணவரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது ஆசிரிய தொழிற்சங்கங்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் -

ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், அதிபர்கள் ஆகியோரின் மூன்று சேவைகளிலும் உள்ள சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைத்து அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நீதிமன்றம் உறுதியளிக்குமானால் ஆசி[illegible]யர்கள் உடனடியாக விடைத்தாள் திருத்து[illegible] பணிக்குச் செல்வர் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

தற்காலிக சமரச ஏற்பாடு

இது தொடர்பாக விசாரணை நடத்திய நீதிமன்றம் தற்காலிகமாக ஒரு சமரச ஏற்பாட்டைப் பிரேரித்தது.

* விடைத்தாள் திருத்தும் பணிக்கு வழமைபோல ஆசிரியர்கள் உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

* ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகிய முத்தரப்பினரின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க ஜனாதிபதியின் செயலாளரும், கல்வி அமைச்சரின் செயலாளரும் ஆவன செய்ய வேண்டும். உரிய தொடர் நடவடிக்கைகளை எதிர்வரும் 8 ஆம் திகதி அவர்கள் நீதிமன்றில் தெரியப்படுத்த வேண்டும்.

* அப்போது சுமுகமான இணக்கம் எட்டப்படுமானால் ஆசிரியர்கள் உடனடியாக விடைத்தாள் திருத்தும் பணிக்குத் திரும்ப வேண்டும்.

-இதுவே நீதிமன்று நேற்று எடுத்த வழிகாட்டலாகும். விடைத்தாள் திருத்தும் பணிக்கு உடனடியாகத் திரும்பும்படி ஆசிரியர்களை நீதிமன்றம் கட்டாயப்படுத்தவில்லை என்றும், நீதிமன்றம் தெரிவித்தது.

எனினும், இவ்விடயத்தில் ஆசிரியர்களுக்கு நீதி கிடைப்பதை எட்டாம் திகதி தவணையின்போது நீதிமன்றம் உறுதிப்படுத்துமானால் அடுத்த பத்து நாள்களுக்குள் விடைத்தாள் மதிப்பிடும் பணியைத் தாங்கள் பூர்த்தி செய்து தருவார்கள் என ஆசிரியர்கள் சார்பில் நீதிமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டது. (சி)

2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்

3000/= உடன் இரண்டு பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| Dip. In MS Office | 4 Months |
| Dip. In Desktop Publishing | 4 Months |
| Dip. In Internet e-mail | 2 Months |
| Dip. In Hardware Engineering | 4 Months |
| Dip. In Computer Programming | 6 Months |
| Dip. In Eng. Drawing & Auto CAD | 3 Months |
| Dip. In Computerized Accounting | 4 Months |
| Dip. In Data Base Management System | 4 Months |
| Dip. In Audio & Video Editing | 4 Months |
| Dip. In Visual Basic | 4 Months |
| Dip. In Web Designing | 4 Months |

Batch I 06.09.2008 Batch II 10.09.2008
Batch III 14.09.2008 Batch IV 19.09.2008

ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்

Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170

CHEMISTRY
A/L 2010
[illegible]
ஆரம்பம்:- 02.09.08
Tue. 6.15 a.m
{Tue, Fri 6.15-7.15}
A/L 2009
[illegible]
ஆரம்பம்:- 03.09.08
Wed. 4.30 p.m
{Wed, Thu 4.30-5.30 p.m}
S.Vasu
NAVALAR

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2009
★ இந்து நாகரீகம்
PAPER CLASS
ஆரம்பம்:- இன்று 5p.m
Mr.S.கார்த்திக் B.A
★ அரசியல்:- Mr.[illegible]
பேச, எழுத, வாசிக்க
★ சிங்களம்
★ Spoken English

BRIGHTMAN
பிறவுண் வீதி, [illegible] யாழ் நகர்
புதிய பிரிவு 3மாத காலத்தில்
சரளமாக உரையாட சிங்களம்
பேராசிரியர்:- திரு.லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்:- 03.09.08
Wed 8.00 a.m
(Mon, Wed 8.00 a.m)
★ அனுமதிக்கு முந்துங்கள்.

PERSONAL CLASSES
316, Point Pedro Road
(நாவலர் கல்வி நிலையம் முன்)
★ ENGLISH
By.MR.Maheswaran (Dip-in-Eng)
(CD மூலமான உச்சரிப்புப் பயிற்சி)
★ SINHALA CLASS
By.K.கார்த்திகேயன்
★ ஆரம்பம் நாளை 4 மணி
(03.09.2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.